

# கலவரபூமியானது கால்பந்து மைதானம்

இந்தோனேஷியாவில் பதற்றம்!

10 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 74 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை
(03.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 06 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

# பாடப்புத்தகங்களை அச்சிடுவதில் சிக்கல்

யோ.தர்மராஜ்

2023ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கு தேவையான 33 இலட்சம் பாடப்புத்தகங்களை அச்சிடாமல் இருக்க கல்வி அமைச்சு தயாராகி வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் அழைப்பின்பேரில் நேற்று (02) திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டார். (படப்பிடிப்பு: அப்துல்சலாம் யாசீம்)

# உணவுத் தட்டுப்பாடு; போஷாக்கின்மை!

## 53 ஆயிரம் சிறுவர்கள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை



யோ.தர்மராஜ்

இலங்கையில் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள 5.7 மில்லியன் மக்களில் 2.3 மில்லியன் பேர் குழந்தைகளாவர். உணவுத் தட்டுப்பாட்டினால் நாட்டில் போஷாக்கின்மை ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்பதோடு, இதனால் 53 ஆயிரம் சிறுவர்கள் கலோரி மற்றும் புரதக் குறைபாட்டினால் வைத்தியசாலையில் அனுமதிக்கும் ஆபத்துள்ளதாக சிறுவர் நோய் விசேட வைத்தியர் அஜித் அமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திபொன்றில் கலந்துகொண்டு உணவுத் தட்டுப்பாடு குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 22 மில்லியன் மக்கள் இருக்கின்றனர். இதில் 5.7 மில்லியன் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு பாதிப்பாகவுள்ளது. இந்த 5.7 மில்லியன் மக்களில் 2.3 மில்லியன் குழந்தைகள் உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், நாட்டில் உணவு மற்றும் மந்தபோசணை தொடர்பான பிரச்சினை இல்லையெனக் கூறுவது முற்றிலும் தவறானது.

02 பக்கம்

# கோணேஸ்வரர் ஆலய பூர்வீக வரலாறை அறிந்துகொண்டேன்; இந்தியா எப்போதும் உதவத் தயார்

## தூதுவர் கோபால் பாக்லே உறுதி

அப்துல்சலாம் யாசீம்

இந்தியா எப்பொழுதும் இலங்கைக்கு துணையாக இருப்பதுடன், இலங்கை எப்பொழுதும் இந்தியாவின் நட்பு நாடாக விளங்கும்.

02 பக்கம்

# சுகாதார அணையாடை மூலப்பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் நீக்கம்!

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் சுகாதாரத்தை உறுதிசெய்தல் மற்றும் சுகாதாரப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், உள்நாட்டில் சுகாதார அணையாடைகளை தயாரிப்பதற்காக (Sanitary Napkin) இறக்குமதிசெய்யப்படும் பிரதான 05 மூலப்பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

02 பக்கம்

# போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த புதிய செயலணி

யோ.தர்மராஜ்

போதைப்பொருள் இறக்குமதி, விநியோகம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்த புதிய செயலணியொன்று நியமிக்கப்படவுள்ளதாக...

02 பக்கம்

# கோணேசர் ஆலயத்தை அபகரிக்க விடமாட்டோம்!

## இந்து மக்கள் கட்சி எச்சரிக்கை

திருகோணமலை திருக் கோணேஸ்வரர் ஆலயத்தை அரசு ஆக்கிரமிக்க முயன்றால், 1200 மில்லியன்...

02 பக்கம்

# உயர் பாதுகாப்பு வலய வர்த்தமானி மீளப்பெறப்பட்டது!

## நாடு திரும்பிய கையோடு ரணில் அதிரடி

உயர் பாதுகாப்பு வலயங்களாக பல பகுதிகளை அறிவித்து, அண்மையில் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரத்துசெய்துள்ளார்.

02 பக்கம்

# இலங்கை அரசாங்கத்திற்கு ரூ.1,382 மில்லியன் நட்டம்!

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை



சீனவிநியோகஸ்தர் ஒருவரிடமிருந்து 96,000 மெட்ரிக் தொன் கரிம உரங்களை சர்ச்சைக்குரிய வகையில் கொள்வனவு செய்தமை காரணமாக இலங்கை...

02 பக்கம்

Tik Tok பாவனை அதிகரிப்பு;

# யாழில் 16 மாணவர்கள் சிகிச்சை

ரிக் ரொக் மற்றும் ஒன்லைன் கேம் ஆகியவற்றுக்கு அடிமையாகி, அதிலிருந்து மீள்வதற்கு உளவள சிகிச்சைக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 பக்கம்

# பூநகரி கடற்றொழிலாளர்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்

## கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு




உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பூநகரி கடற்றொழிலாளர்கள் நேற்று (02) மூன்றாவது நாளாகவும் போராட்டத்தை முன் னெடுத்து வருகின்றனர்.

02 பக்கம்

பிரபல நடிகர் தர்ஷன்

# நேற்று திடீர் மரணம்



நிர்ஷன் இராமானுஜம்

இலங்கையின் பிரபல கலைஞர் லிங்கநாதன் தர்ஷன் தர்மராஜ் திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பில் நேற்று அதிகாலை காலமானார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் வைக்கப் பட்டுள்ளதுடன்....

02 பக்கம்

# கொள்ளையர்கள் மீது பொலிஸார் சூடு; பஸ்ஸில் பயணித்த இளம்பெண் பலி!



கம்பஹா தனோவிட்ட பிரதேசத்தில் நேற்றுக்காலை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 29 வயதுடைய பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

02 பக்கம்

# தேயிலை ஏற்றுமதி வருமானத்தை நாட்டுக்கு கொண்டுவர காலக்கெடு


## ஏற்றுமதியாளர்களுக்கு மத்திய வங்கி ஆளுநர் விதிப்பு

யோ.தர்மராஜ்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் தேயிலை ஏற்றுமதிமூலம் கிடைக்கும் வருமானத்தை ஒரு மாதத்திற்குள்...

02 பக்கம்

## உஷ்



பாதுகாப்பமைச்சின் செயலாளராக புதியவர் ஒருவரை நியமிக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஜெனரல் கமல் குணரத்ன அந்த பதவியிலிருந்து தூக்கப்படவுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் தவறாக வழிநடத்தப்பட்டதாக வந்த செய்திகளையடுத்து, இந்த புதிய நியமனம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வரையறுக்கப்பட்டது புனர்வாழ்வு காலம்

யோ.தர்மராஜ்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் வதிவிட புனர்வாழ்வு காலத்தை, நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக அதிகபட்சமாக...

02 பக்கம்

# ஒரு கோடியை நெருங்கிய சமுர்த்தி மானியம் பெறுவோரின் எண்ணிக்கை

## 7 இலட்சத்து 26 ஆயிரம் பேர் காத்திருப்போர் பட்டியலில்

யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடி காரணமாக சமூர்த்தி மானியம் பெறும் மக்களின் எண்ணிக்கை ஒரு கோடியை நெருங்கியுள்ளதாக நிதி அமைச்சு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, கடந்த ஆண்டு தொடக்கத்தில், சமுர்த்தி மானியம் பெறும் எண்ணிக்கை (ஒரு குடும்பத்திற்கு நான்கு ...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

முந்தி சைவ ஆக்கள் மட்டும் தான் நவராத்திரி விரதம் இருந்தாங்கள்.. இப்ப எல்லா சமய ஆக்களும் விரதம் இருக்குறாங்கள்.. எல்லாம் கோட்டா செய்த மகிமை..



# மதுபானம், சிகரெட்டின் விலைகள் அதிகரிப்பு

**யோ.தர்மராஜ்**

இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன்படி சமூக பாதுகாப்பு வரி நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், மதுபானம் மற்றும் சிகரெட்டின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் இரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் மதுபானத்தின் விலை 150 ரூபாவாலும் சிகரெட்டின் விலை 5 ரூபாவாலும் அதிகரித்துள்ளதாக மது வரித் திணைக்களம் மற்றும் இலங்கை புகையிலை நிறுவனம் அறிவித்துள்ளது.

DCSL நிறுவனத்தின் அனைத்துவகை மதுபானங்களின் விலையை உயர்த்தியுள்ளதுடன், 750 மில்லி லீற்றர் அதிவிசேட மதுபான போத்தல் ஒன்றின் விலை 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஏனைய மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மது வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கோல்ட் லீஃப் சிகரெட்டின் புதிய விலை 85 ரூபாவாகவும், பென்சன் அன்ட் ஹெஜஸ் சிகரெட்டின் புதிய விலை 90 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கோணேஸ்வரர் ஆலயத்தை...

இந்துக்களும் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் - என இந்தியாவிலுள்ள இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் எச்சரித்துள்ளார்.

திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் சில பகுதிகளை ஆக்கிரமிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பில் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத், சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்திலேயே மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"பௌத்த விரிவாக்கம் மற்றும் ஆக்கிரமிப்பு ஆகிய திட்டத்தின் ஒரு பகுதியாக நாடாளுமன்றத்தில் பௌத்த பெரும்பான்மையைக்கொண்ட இலங்கை அரசாங்கம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தியில் பாபர் செய்ததைச் செய்ய விரும்பினால், நாங்கள், 1200 மில்லியன் உலகளாவிய இந்துக்கள், எங்கள் கண்களையும் காதுகளையும் மூடி அமைதியாக இருக்க மாட்டோம்" என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரத்தில் ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த 400 ஏக்கர் நிலத்தையும் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

## ஒரு கோடியை...

உறுப்பினர்கள் என்ற அடிப்படையில்) 68 இலட்சம் அல்லது 17 இலட்சம் குடும்பங்களாக காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு, குறித்த 17 இலட்சம் குடும்பங்களைத் தவிர, அதற்கு மேலதிகமாக 7 இலட்சத்து 26 ஆயிரத்து குடும்பங்கள் சமுர்த்தி மானியத்துக்காக காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக நிதி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளன. அதன்படி ஒரு குடும்பத்துக்கு நான்கு பேர் என்று கணக்கிட்டால் சுமார் 29 இலட்சம் பேர், புதிய சமுர்த்தி மானியம் பெறுவோராக காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர்.

நாட்டில் மொத்த மக்கள் தொகை 222 இலட்சமாக காணப்படும்போது, கிட்டத்தட்ட அதில் 100 இலட்சம் மக்கள் சமுர்த்தி பெறுவோராக மாறியுள்ளதாக நிதி அமைச்சின் அறிக்கை ஊடாக தெரியவந்துள்ளது.

## வரையறுக்கப்பட்டது...

மூன்று மாதங்களுக்கு மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

போதைக்கு அடிமையானவர்களைக்கொண்டு சிறைச்சாலைகள் நிரப்பப்படுவதால் அவர்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் பாரிய செலவை சுமக்கவேண்டியுள்ளதை கவனத்திற்கொண்டு, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

போதைக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பதற்கான பரிந்துரைகள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கு ஏற்கனவே விசேட சுற்றறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

## பிரபல நடிகர்...

இன்று மாலை இறக்குவானை கொட்டலையிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

பொதுமக்களின் அஞ்சலிக்காக பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்படவுள்ளது.

இறக்குவானையில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று அவரது பூதவுடல் தகனம் செய்யப்படவுள்ளது.

இரத்தினபுரி, இறக்குவானையை பிறப்பிடமாகக்கொண்ட அவர், இறக்குவானை சென். ஜோன்ஸ் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

சிட்னி சந்திரசேகர என்பவரினால் 2008ஆம் ஆண்டு இயக்கப்பட்ட சிங்கள சின்னத்திரை நாடகமான ஏ9 மூலம் தர்ஷன் தர்மராஜ் அறிமுகமானார்.

அவர் தமது சினிமா பயணத்தை அதே ஆண்டில் பிரபாகரன் என்ற சிங்கள மொழித் திரைப்படத்தில் ஆரம்பித்தார்.

இதேவேளை, அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வேடத்தில் நடித்திருந்தார். இதற்காக பல விமர்சன ரீதியான சிக்கல்களையும் எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முன்னணி நடிகராகத் திகழ்ந்த தர்ஷன் தர்மராஜ், பல சகோதர மொழி திரைப்படங்கள் மற்றும் நாடகங்களில் நடித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பிரபலமடைந்த சிங்கள திரைப்படங்களான 'இனியவன்', 'சுனாமி' போன்ற திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இனியவன் படத்துக்காக விருதுகளையும் அவர் வென்றுள்ளார்.

அத்துடன், இலங்கையில் உருவான கோமாளி கிங்ஸ் என்ற தமிழ் மொழி திரைப்படத்திலும் தர்ஷன் தர்மராஜ் நடித்துள்ளார்.

அவருக்கு இலங்கை கலைத்துறையினர் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

## ரிக் ரொக்...

ரிக் ரொக்குக்கு அடிமையாகி அதன்மூலம் காதல் வயப்படுதல், அதிகநேரம் ரிக் ரொக் செயலியுடன் செலவழித்தல் மற்றும் உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுத்த 10 பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட 16 மாணவர்கள் கடந்த 09 மாதங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

இவ்வாறான சிகிச்சைகளுக்கு பெரும்பாலும் விரும்பி சிகிச்சைபெற பலர் வைத்தியசாலைகளுக்கு செல்வதில்லை. அவ்வாறிருக்கையில் கடந்த 09 மாதங்களில் 16 பாடசாலை மாணவர்கள் சிகிச்சை பெற வந்துள்ளனர் என்றால், யாழில் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவாக இருக்கலாமென தாம் அஞ்சுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, 09ஆம் வகுப்புக்கு மேற்பட்ட 97 வீதமான மாணவர்கள் சொந்தமாக தொலைபேசிகள் வைத்திருப்பவர்களாகவோ, பெற்றோரின் தொலைபேசிகளை அதிகம் பாவிப்பவர்களாகவோ உள்ளனர்.

குறிப்பாக, 12 வயது தொடக்கம் 17 வயது வரையிலான மாணவர்கள் பெரும்பாலும் இணைய விளையாட்டுகளில் (ஒன்லைன் கேம்) ஈடுபடுபவர்களாக உள்ளனர். இவ்வாறாக கைத்தொலைபேசிகளுக்கு மாணவர்கள் அடிமையாவதால், நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், கொலஸ்ரோல், நோய் எதிர்ப்புத்தன்மை குறைவடைதல், என்புத்தொகுதிசார் நோய்கள் என்பவற்றுக்கு ஆளாவார்கள்.

ஒரு மனிதன் சராசரியாக ஒரு நிமிடத்தில் 16 தடவைகள் கண்ணை சிமிட்ட வேண்டும். இணைய விளையாட்டுகளில் ஈடுபடும்போது, பார்வை குவிப்பை ஓர் இடத்தில் செலுத்துவதனால், நிமிடத்திற்கான கண் சிமிட்டல் 8 தடவைகளை விட குறைகின்றன. இதனால் பார்வை குறைபாடுகள் ஏற்படும். சிலவேளைகளில் பார்வை இழப்பையும் ஏற்படுத்திவிடலாம்.

எனவே, பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்காணிப்பும், கண்டிப்பும் கவனக் குறைவான செயற்பாடுமே பிள்ளைகளின் உடல் - உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என குழந்தை மருத்துவ நிபுணர் கீதாஞ்சலி சத்தியதாஸ் தெரிவித்தார்.

## இலங்கை...

அரசாங்கத்திற்கு 1,382 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கேள்விக்குரிய சீன உரத்தைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியை விடுவிப்பதன் மூலம் அரசுக்கு இழப்பை ஏற்படுத்திய அனைத்து அதிகாரிகளும் சட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

**கரிம உர இறக்குமதி**

2021ஆம் ஆண்டில், சீனாவில் உள்ள கிங்டாவோ சீவின் பயோடெக் குரூப் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கரிம உரத்தை இறக்குமதிசெய்ய அப்போதைய அரசாங்கம் அனுமதி வழங்கியது.

எனினும் இலங்கையின் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைகள் (NPQS), நோய்களை ஏற்படுத்தும் எர்வினியா மற்றும் பேசிலஸ் ஆகிய அழிவுகரமான பக்டீரியாக்களை அவதானித்துள்ளது.

**இறக்குமதி செய்வதற்கு வசதியாக கடன்**

இதற்கு மத்தியிலும், விவசாய அமைச்சின் அப்போதைய செயலாளரால் நியமிக்கப்பட்ட விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, உரிய கரிம உர ஏற்றுமதியை இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்கியிருந்தது.

இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், சிலோன் உரக் கம்பனி மற்றும் கொழும்பு வர்த்தக உரக் கம்பனி லிமிடெட் ஆகியன இந்த உர ஏற்றுமதியை இறக்குமதி செய்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை (LOCs) திறந்துள்ளதாக அந்த கணக்காய்வாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உயர் பாதுகாப்பு...

கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்து புதிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பில் பல இடங்களையும் நிர்வாகத் தலைநகர் ஸ்ரீ ஜயவர்தனபுரவையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்த 23ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

அதன்படி, நாடாளுமன்ற வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், உயர் நீதிமன்ற வளாகம், உயர் நீதிமன்ற வளாகம் - கொழும்பு, நீதவான் நீதிமன்ற வளாகம் - கொழும்பு மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, இலங்கை கடற்படைத் தலைமையகம் மற்றும் பொலிஸ் தலைமையகம் உயர் பாதுகாப்பு வலயங்களாக நியமிக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அக்குரேகொடவில் உள்ள இலங்கை இராணுவத் தலைமையகம், இலங்கை விமானப்படைத் தலைமையகம், பிரதமர் அலுவலகம் (மலர் வீதி), அலரிமாளிகை (கொள்ளுப்பிட்டி), பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் முப்படைத் தளபதிகளின் குடியிருப்புகளும் உயர் பாதுகாப்பு வலயங்களாக நியமிக்கப்பட்டன.

இதன்படி, 1955ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின் பிரிவு 2இன் கீழ், 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் செப்டெம்பர் 23, 2022 அன்று வெளியான முன்னைய வர்த்தமானியை இரத்துச்செய்யும் வர்த்தமானியை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வெளியிட்டார்.

## பூநகரி...

பூநகரி, கிராஞ்சி இலவன்குடா கடல் பகுதியில் பாரம்பரியமாக சிறகு வலை தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலைமுதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன் குடா கடற்பரப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட கடற்றொழிலாளர்கள், சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை அன்றாட வாழ்வாதாரத் தொழிலாக பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களின் வாழ்வா தாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டைப் பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் குறித்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சாதகமான முடிவை சம்பந்தப்பட்டவர்கள் வழங்கும்வரை தாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், மீனவர்கள் உள்ளடங்கலாக மக்கள் முகங்கொடுத்துவரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு கை கொடுத்து மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டு வருகின்ற மன்னார் மாவட்ட சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் (1) மதியம் குறித்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது குறித்த மீனவர்களின் பிரச்சினை களை குறித்த குழுவினர் கேட்டறிந்தனர்.

தமக்காக ஓர் அமைப்பு ஆதரவு வழங்கி வருகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்க உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, தமது போராட்ட வடிவை மாற்றி சுழற்சிமுறையில் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்நிலையில் 3ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமை (2) தமது போராட்டத்தை குறித்த மீனவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

## போதைப்பொருள்...

நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரன் அலஸ், நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராதா ஜயரத்ன, சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம் மற்றும் நீதி அமைச்சுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து நீதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், கைது செய்யப்படும் நபர்களினால் சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடப்பற்றாக்குறை, போதைப் பொருள் விநியோகம் செய்பவர்களை கைதுசெய்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையால் கைதுசெய்யப்பட்டவர்களின் புனர்வாழ்வு தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விநியோகம், விற்பனை மற்றும் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு புதிய செயற்குழு ஒன்றை உருவாக்குவதற்கும், இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில் தயாரிக்கப்படும் தேசியக் கொள்கைக்கும் அனைத்துத் தரப்பினரின் ஆதரவு தேவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இளைஞர்கள் மத்தியில் ஆபத்தான போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதுடன், 20-30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே அதிகளவில் போதைப்பொருள் பாவனையாளர்களாக உள்ளனர். இந்நிலைமையை விரைவில் கட்டுப்படுத்தாவிட்டால் அடுத்த சில வருடங்களில், இலங்கையில் பெருமளவிலான இளைஞர்களின் உடல்நிலை சீர்குலைந்து குடும்ப வாழ்வு அழிந்துவிடும் என்பதோடு, சமூக விரோதச் செயல்களுக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கும் அபாயம் காணப்படுகின்றது.

போதைப்பொருள் பாவனையினால் சிறைத்தண்டனை அனுபவிக்கும் நபர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைப்பது மற்றும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களிடையே ஆபத்தான போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், குறிப்பாக, தேசிய கொள்கை தயாரிக்கும்போது, பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உணவுத் தட்டுப்பாடு...

இலங்கையில் மந்தபோசணை பிரச்சினை இருந்தது. ஆனால், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு மந்தபோசணை பிரச்சினை ஏற்படுவதற்கு சில காலம் எடுக்கும். உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் சமூகத்தில் மந்தபோசணை பிரச்சினை ஏற்படாது. ஆனால், தற்போதைய உணவுத் தட்டுப்பாட்டினால் எதிர்காலத்தில் மந்தபோசணை பிரச்சினை ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இலங்கையிலுள்ள மக்கள் தங்களுடைய உணவுத் தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்காக பல்வேறு மாற்றுவழிகளை தேர்ந்தெடுத்துள்ளனர். சிலர் தங்களுடைய சொத்துகளை விற்பனைசெய்து உணவுத்தேவையை பூர்த்திசெய்துகொள்ள முயற்சிக்கின்றனர். இந்நிலையில் இலங்கையிலுள்ள அதிகமான மக்கள் உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதனால், கலோரி மற்றும் புரதக் குறைபாட்டால் எதிர்வரும் மாதங்களில் 53 ஆயிரம் சிறுவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்படலாம் என உலக உணவு அமைப்பு எதிர்வுகூறியுள்ளது. எனவே, எதிர்வரும் காலங்களில் அதிகமான மக்கள் உணவுத் தட்டுப்பாட்டினால் ஏற்படும் நோய்களுக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படலாம் - என்றார்.

## பாடப்புத்தகங்களை...

பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்கு ஆயிரத்து 600 கோடி ரூபா செலவிடப்படுவதாலும், காகிதத் தட்டுப்பாடு காரணமாகவும் பாடப்புத்தகங்களை அச்சிடாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதேவேளை, 2023ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாடப்புத்தகங்களை வழங்குவதற்காக பழைய பாடப்புத்தகங்களை சேகரித்து குழந்தைகளுக்கு வழங்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுகாதார...

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்கு வரிச்சலுகையை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் மேற்படி தீர்மானத்திற்கமைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 சுகாதார அணையாடைகள் அடங்கிய ஒரு பக்கற்றின் விலை 50 தொடக்கம் 60 ரூபாவால் குறைவடையும். அதற்கமைய அதன் அதிகபட்ச சில்லறை விலை 260 தொடக்கம் 270 ரூபாவாக இருக்கும். அதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களின் நுகர்வோர் சில்லறை விலைகளும் 18% அல்லது 19% ஆல் குறைவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக வரிச்சலுகை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். உற்பத்தியாளர்கள் இந்த மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் உரிய வரிச்சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு தொழில் அமைச்சு செயலாளரின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனால், அதற்கான செயன்முறைகளை தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய 05 பிரதான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்றபோதும், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியின்போதும் 15% சுங்க இறக்குமதி வரி, 10% -15% CESS வரி மற்றும் 10% PAL வரி ( Ports & Airport Development Levy) ஆகியன நீக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சுகாதார அணையாடைகளுக்கு பூச்சிய சதவீத வற் வரி அறவிடப்படும். அதுபோன்று சுகாதார அணையாடைகளை மூலப்பொருட்களாக இறக்குமதி செய்பவர்களுக்கும் பூச்சிய சதவிகித வற் வரியின் அனுகூலம் கிடைக்கும். நெருக்கடியான காலகட்டத்திற்கு ஏற்றவாறு இச்சலுகைகள் யாவும் அமுல்படுத்தப்படுகின்றன.

## கோணேஸ்வரர்...

எதிர்காலத்தில் மிகக் காத்திரமான உதவிகளை இலங்கைக்கும் அதேபோன்று திருகோணமலைக்கும் நாங்கள் செய்ய காத்திருக்கின்றோம் என இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் அழைப்பின்பேரில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த இந்தியத் தூதுவர், திருக்கோணேஸ்வரரை தரிசித்துவிட்டு, நகராட்சி மண்டபத்தில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மிக ஒரு தலைசிறந்த அரசியல்வாதி மட்டுமல்ல, ஒரு தலைசிறந்த சட்டத்தரணியுமாவார். அவருக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நட்புறவு மிக நேர்த்தியானதும் தலைசிறந்ததுமாக காணப்படுகின்றது.

இந்தியா எப்பொழுதும் இலங்கைக்கு துணையாகவும் இலங்கை எப்பொழுதும் இந்தியாவினுடைய நட்பு நாடாகவும் விளங்கும். எதிர்காலத்தில் மிகக் காத்திரமான உதவிகளை இலங்கைக்கும் அதேபோன்று திருகோணமலைக்கும் நாங்கள் செய்ய காத்திருக்கின்றோம். அத்துடன், இங்கு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளை பார்க்கின்ற போது தமிழ் மக்களுடைய கலாசாரம் இந்து மக்களுடைய பண்பாடுகள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதேபோலவே திருக்கோணேஸ்வர ஆலயத்தினுடைய தர்மகர்த்தாக்கள் திருக்கோணேஸ்வர ஆலயத்தினுடைய பூர்வீகமான வரலாறு அதனுடைய தற்கால பிரச்சினைகள் தொடர்பாக என்னோடு நிறைய கலந்துரையாடினார்கள்.

எதிர்காலத்தில் ஒரு ராஜகோபுரம் அமைக்கப்பட இருக்கின்றது என்ற இந்த செய்தி சந்தோஷமான செய்தி, அந்த அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவுவதற்கு எப்பொழுதும் காத்திருக்கின்றது. அதுமாத்திரமல்ல, இந்தியா எப்பொழுதுமே இலங்கையுடன் நட்பாகவும் உறுதுணையாகவும் இருக்க காத்திருக்கின்றது.

அதனுடைய பொருளாதார சமூக வசதிகளுக்கு இந்தியா எப்பொழுதும் உதவும் - என்றார்.

## கொள்ளையர்கள்...

கொள்ளைச் சம்பவத்தின்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டின்போது, கலென்பிந்துனு வெவயிலிருந்து கொழும்பு நோக்கி பஸ்ஸில் பயணித்த பெண் தற்செயலாக சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தனோவிட்ட நகரில் உள்ள மதுபான விடுதியில் கொள்ளையடிக்க வந்த சந்தேக நபர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக அவர் கூறினார்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த சந்தேக நபர்கள் கொள்ளைக்காக வந்த வாகனத்துடன் தப்பிச்செல்ல முயன்ற நிலையில், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

பஸ்ஸின் பின் ஆசனத்தில் இருந்த பெண் படுகாயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார்.

## தேயிலை...

நாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னுடைய அனுபவத்தின்படி, நீங்கள் ஏற்றுமதி தொடர்பான வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது, அந்த வருமானத்தை மீண்டும் நாட்டிற்கு கொண்டுவருவதற்கு நாங்கள் உங்களுக்கு 180 நாட்கள் அவகாசம் தருகின்றோம். ஆனால், நாட்டில் நெருக்கடி நிலைமை தொடரும்போது, வெளிநாடுகளில் கொள்வனவு செய்வதற்காக நாங்கள் 180 நாட்களுக்கு கடனை வழங்குவோம் என்று அர்த்தமில்லை.

எங்களுடைய வங்கியில் முற்பணம் செலுத்தாமல் இந்த நாட்டுக்கான இறக்குமதி செயற்பாடுகளுக்காக வெளிநாட்டுக் கடன் கடிதத்தை வழங்கமுடியாத நிலையில், உங்களுடைய முழு வருமானத்தையும் 6 மாத காலத்திற்கு உங்களுடைய வெளிநாட்டு விநியோகஸ்தர்களுக்கு வழங்கினால் அங்கு பிரச்சினை ஏற்படும்.

உங்கள் பிரதிநிதிகளையும் வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சரையும் நான் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் எங்கள் தேயிலை ஏற்றுமதியாளர்கள் மாதந்தோறும் 100 மில்லியன் டொலர்களை வருமானமாக பெற்றாலும், 50 டொலர் மில்லியனை மாத்திரமே ரூபாவுக்கு மாற்றுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால், இன்று நீங்கள் ஏற்றுமதி செய்கிறீர்கள் என்றால், ஒரு மாதத்திற்குள் வருமானத்தை நாட்டுக்கு கொண்டுவரவேண்டிய நேரம் வந்துவிட்டது என்றே நான் நினைக்கிறேன். இதற்காக, தனிப்பட்ட முறையில், நிர்வாக நடவடிக்கைகளை முன்வைக்க நான் விரும்பவில்லை.

நாட்டின் தற்போதைய நிலையைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்துச் செயற்படுங்கள் - என்றார்.

# 'மஹநுவர ஒடெசி' சொகுசு சுற்றுலா புகையிரதச் சேவை ஆரம்பம்

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி வரைக்கும் பயணிக்கும் 'மஹநுவர ஒடெசி' சொகுசு சுற்றுலா புகையிரதம் நேற்று முன்தினம் (01) முற்பகல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் கொழும்பு கோட்டையிலிருந்து பயணத்தை ஆரம்பித்தது.

இந்த சொகுசு விசேட புகையிரதம் தலதா மாளிகையை தரிசிப்பதற்கும் மற்றும் பேராதனை தாவரவியல் பூங்காவைப் பார்வையிடுவதற்கும் வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அநுராதபுரம் புனித பூமியை தரிசிப்பதற்குச் செல்லும் பக்தர்களுக்காகவும் மிகவிரைவில் கொழும்பு கோட்டையிலிருந்து அநுராதபுரம் வரை பயணிக்கும் விசேட புகையிரத ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவருக்கு பதவி உயர்வு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஜே. சி. போல் ரொஹான், நுண்கலைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் ஆகியோரை பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம்(01) சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய, பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த அருட் கலாநிதி ஜே.சி. போல் ரொஹான், கலாநிதி தா. சனாதனன் ஆகியோரின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அருட் கலாநிதி ஜே. சி. போல் ரொஹான் கிறிஸ்தவ நாகரிகத்தில் பேராசிரியராகவும், நுண்கலைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் நுண்கலைத் துறையில் கலை வரலாற்று (துறைக்குரிய இருக்கை) பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு




ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு. எனவே, இலவசக் கல்வி பாதுகாக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் சாசனம் இன்னும் கூடிய ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தேசத்தின் குழந்தைகளை டிஜிட்டல் உலகினில் வளமுள்ளவர்களாக உருவாக்குவதே எங்களின் ஒரே இலக்காகும். அந்த இலக்கை மனதில் கொண்டு "பிரபஞ்சம்" வேலைத்திட்டத்தை நமது எண்ணக்கருவாகக் கொண்டு செயல்படுத்துகிறோம். அந்த எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கப்படுவதோடு, சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு "பிரபஞ்சம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 35ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா (ரூ.5,000,000) பெறுமதியான பஸ் வண்டி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு நேற்று முன்தினம்(01) அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது, போசாக்கு குறைபாடு காரணமாக சிறுவர்கள் பல கடுமையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் போன்ற வரப்பிரசாதங்கள் எதுவுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி மக்கள்சார் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தி என்பது சம்பிரதாய ரீதியான எதிர்க்கட்சியொன்று அல்ல என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# 2050ஆவது நாளை கடந்த காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்




காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் 2050ஆவது நாளை கடந்துள்ள நிலையில், வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்தினம் (01) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக 2050ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மார், சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, "எல்லோரும் சிறுவர் தினத்தை கொண்டாடி மகிழ்வாக இருக்கிறார்கள். நாங்கள் சிறுவர் தினத்தை கொண்டாட முடியாத நிலையில் இருக்கின்றோம். நாம் 2050 நாளாக இருப்பது யாருக்கும் தெரியாதா? இன்று நாம் தெருவில் இருந்து கண்ணீர் விடுகின்றோம். எமது பிள்ளைகள் வராமையால் எங்களுக்கு நிம்மதி இல்லை.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வந்து தீர்வு பெற்று தர வேண்டும். எமது பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தபோது தான் காணாமல் ஆக்கப்பட்டார்கள். எங்களது கண்ணீர் பொல்லாத கண்ணீர். எமது தாய்மாரின் கண்ணீருக்கு பதில் தர வேண்டும். அவ்வாறு தராவிடின் எமது கண்ணீர் அவர்களை நிம்மதியாக இருக்க விடாது. எமக்கு நீதி வேண்டும்" என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சிங்களவர்கள் இலங்கைக்கு வந்தேறு குடிகள் என வெளிப்படுத்தும் பதாதையையும், அமெரிக்க கொடி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் ஏந்தியிருந்தனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலரும் கலந்து கொண்டனர்.

# எரிபொருளுக்கான நிலுவைப் பணத்தை மீள் செலுத்த வேலைத்திட்டம்

## "பெட்ரோ சைனா" நிறுவன அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடல்



இலங்கை பழைய மற்றும் பாரிய எரிபொருள் விநியோகஸ்தரான "பெட்ரோ சைனா" நிறுவன அதிகாரிகளுக்கும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று (02) இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் "பெட்ரோ சைனா" நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவின் அதிகாரிகள் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது, அமைச்சர் அந்த நிறுவன அதிகாரிகளுடன் மிகுதி பணத்தை செலுத்துதல், மீள் செலுத்துவதற்கான வேலைத்திட்டம் மற்றும் எரிபொருள் விநியோகத்தை முறையாக முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார். இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெட்ரோ சைனா நிறுவனம் அதிகளவில் எரிபொருளை விநியோகித்துள்ளதுடன், 10 வருடங்களாக சிறந்த புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# புதையல் தோண்டிய ஐவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

மதவாச்சி கல்கடவள வனப்பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ கோப்ரல் உள்ளிட்ட ஐந்து பேரை மதவாச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய, நேற்று முன்தினம் மாலை குறித்த வனப்பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக் கொண்டிருந்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அநுராதபுரம், வஹமல் கொள்ளேவ, புளியங்குளம், மதவாச்சி, அளுத்கம மற்றும் பதவிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34,30,35,45 மற்றும் 43 வயதுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மதவாச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# காணாமல்போன இளைஞன் சடலமாக மீட்பு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் புதூர் பிரதேசத்தில் காணாமல்போன இளைஞன் 5 தினங்களின் பின்னர் அப்பிரதேச மயானத்தில் இருந்து, உருக்குலைந்த நிலையில் நேற்று (02) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

புதூர் 5ஆம் குறுக்கைச் சேர்ந்த 24 வயதுடைய ஜெயகரன் அருஜன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதூர் மயானத்தில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கிடப்பதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு சம்பவதினமான நேற்று பகல் தகவல் வழங்கினர். இதனையடுத்து, தடயவியல் பிரிவு பொலிஸார் சகிதம் சென்று விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர். கடந்த மாதம் 27ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறிய காணாமல்போன இளைஞனே 5 தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். நீதிமன்ற அனுமதியைபெற்று பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உங்கள் பிள்ளையின் வெளிநாட்டுக் கல்விக்கான கடவுச்சீட்டு




வெளிநாட்டு நாணயத்தில் சேமித்திடுங்கள்

ETHERA ISURA Doodaru
PERSONAL FOREIGN CURRENCY ACCOUNT (PFCA)

- 2% மேலதிக வட்டி
- கல்வி மற்றும் மருத்துவ தேவைக்கான பணப் பரிமாற்றத்திற்குத் தரகு பணம் இல்லை
- சிறப்பு உடல்நலக் காப்புறுதி மற்றும் விபத்துக் காப்புறுதி
- கல்விச் சாதனைகளுக்குச் சிறப்புப் பணப் பரிசுகள்
  - லண்டன் அல்லது இலங்கை உயர்தர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 10,000 பணப்பரிசு (அதிகபட்சம் 3 பாடங்கள் வரை)
  - லண்டன் அல்லது இலங்கை சாதாரணதர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 5,000 பணப் பரிசு (அதிகபட்சம் 5 பாடங்கள் வரை)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: +94 70 1750 294

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஒக்டோபர் 03ஆம் திகதி, திங்கட்கிழமை

# கோட்டா அரசின் முறைகேடுகள்!

கடந்த எட்டு வருடங்களில் நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்கள் நியமித்த, பத்து விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களுக்கு ரூ. 504 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ள தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

வழக்கம்போல், கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுன அரசின் ஆட்சிக்காலத்திலேயே இதற்காக பெரும் தொகை நிதி விரயமாக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் அதிகபட்சமாக ரூ. 120 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது

பொதுவாக, கண்டுபிடிப்புகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடும் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் முடிவுகள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எனவே, இந்தச் செலவினங்களுக்கு பலன் கிடைத்துள்ளதா என்பதை அளவிட முடியவில்லை என்று சொல்லப்படுகிறது.

மார்ச் 3, 2015 தொடக்கம் இந்த ஆண்டு ஜூன் 30இற்கு இடையில், இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் செயற்பட்டன. அவற்றிற்கான பணம் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இன்னும் இயங்குகின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2020 மற்றும் 2021இற்கும் இடையில் ஐந்து விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தார். அவரது பதவிக்காலத்தில் மொத்தம் ரூ. 337 மில்லியன் செலவிடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அரசியல் பழிவாங்கல்களை விசாரிக்கும் ஆணைக்குழு எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் குற்றஞ்சாட்டப்பட்ட தவறுகள், முறைகேடுகள், முறைகேடுகள் பற்றிய விசாரணை மற்றும் அறிக்கை செய்வதற்கான ஆணைக்குழு, முந்தைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் கண்டுபிடிப்புகள், முன்னோக்கி செல்லும் வழியை மதிப்பிடுவதற்கான ஆணைக்குழு, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களை விசாரிக்கும் ஆணைக்குழு மற்றும் இலங்கை சுங்கத்தில் முறைகேடுகள் தொடர்பான ஆணைக்குழு ஆகியன கோட்டாவால் நியமிக்கப்பட்டன.

2015 முதல் நாட்டை நிர்வகித்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்து ஆண்டுகளில் ஐந்து விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, ரூ. 254 மில்லியன் செலவிடப்பட்டிருப்பதை தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. எடுத்ததற்கெல்லாம் விசாரணை ஆணைக்குழுக்கள், விசேட வர்த்தமானி, விசேட சுற்றறிக்கை என்று கடந்த கோட்டாபய ஆட்சியில் நிர்வாக, நிதி சீர்கேடுகள் நடந்திருப்பது இப்போது வெளிச்சத்துக்கு வருகின்றது.

ஒரு நாட்டின் தேசிய பொருளாதார முன்னேற்றத்துக்கான முகாமைத்துவ தலைமைப் பொறுப்பு அரசுக்கே உரியதாகும். நாட்டின் தேசிய பொருளாதாரம் சிறப்பாக நிர்வகிக்கப்படுவதற்கு, ஆட்சியாளர்கள் அரசாங்கத்தின் நிதி நிர்வாகத்தை சரியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். ஆனால், கோட்டா தலைமையிலான அப்போதைய அரசாங்கம் அரசின் நிதி நிர்வாகத்தை முகாமைத்துவம் செய்வதிலேயே கோட்டை விட்டுவிட்டு நின்றது. அதன் விளைவுகள்தான் இன்றைய நிலைமை.

நாட்டின் தேசிய பொருளாதார நிர்வாகமும் அரசாங்கத்தின் நிதி நிர்வாகமும் சரியாக முகாமைத்துவம் செய்யப்பட்டால் ஒன்றையொன்று உந்தி முன்னேற்றுபவையாகும். ஆனால், முகாமைத்துவம் பிழையானால் ஒன்றுக்கொன்று பாதகமான தாக்கங்களை விளைவிப்பவையாகும். அதாவது, அரசாங்க நிதி நிர்வாகத்தை சரியாக முகாமைத்துவம் செய்யவில்லையென்றால் ஆட்சியாளர்களால் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றகரமான முறையில் செயற்படுத்த முடியாது என்பதே அர்த்தமாகும்.

2019 ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டா வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலே மக்களின் வரி வசூல் சம்பந்தமாக வரிச்சலுகை கொடுப்போம் என்று அறிவித்திருந்தார். இதனை அப்போதிருந்த நிதியமைச்சர் மங்கள சமரவீர உடனடியாக பகிரங்கமாக எதிர்த்தார். பத்திரிகை மாநாடு நடத்தி, இந்த விஞ்ஞாபனம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையானது லெபனான், வெனிசுலா போல் மாறும் என்றார். அதேபோல் கிரீஸ் நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு ஏற்படும் என்றும் அன்றே எச்சரித்தார். ஆனால், 2019 டிசம்பரில் ஜனாதிபதி கோட்டா சகல முன்மொழிவுகளையும் நடைமுறைப்படுத்தினார். அதன் விளைவு 25 வீத வரவு இல்லாமல்போனது. வெளிநாட்டின் நிதி உதவிகள் தடைப்பட்டன. ஓதுக்கீட்டில் இருந்த தங்கம் மற்றும் டொலர்களை விற்றது கோட்டா அரசு. அதுமட்டுமல்ல, உள்ளூர் உற்பத்தியை பாதிக்கும்வண்ணம் உரப்பாவனைக்கு தடை விதிக்கப்பட்ட. கடந்த ஏப்ரல் மாதத்திலேயே நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது.

கோட்டா வீட்டுக்கு போ என்று மூன்று மாத கால போராட்டத்தில் மக்கள் கிளர்ந்தபோது, அதனை வெறும் எதிர்ப்பாக பார்த்த மக்கள் இன்று கோட்டா அரசின் நிர்வாக சீர்கேட்டைப்பார்த்து அதில் இருக்கும் நியாயத்தை உணர்கின்றனர். கோட்டா அரசின் காலத்தில் நடந்த நிர்வாக,நிதி முறைமையை ஆராய தனி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைத்தாலும் தவறில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை



நண்பர் ஒருவர், “என் மகனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு வாரங்களில் திருமணம். அழைப்பிதழ்கள் அச்சாகி விட்டன” என்றார்.

“மகிழ்ச்சி” என்றேன்.

“அதுதான் இல்லை” என்றார் சோகமாக.

புரியவில்லை எனக்கு. அவர் தொடர்ந்தார்.

“ஒரே மகன். நிச்சயதார்த்தம் நடத்தினோம். மணப்பெண்ணும் பெற்றோருக்கு ஒரே மகள்தான். சந்தோஷமாக இருந்தது. திடீர்னு நேற்று மணப்பெண் போனில் கூப்பிட்டு, “எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கல. நிறுத்திருங்க அங்கிள்”னு சொல்லிடுச்சு” என்றார்.

நான் அவரிடம், “இதுவொன்றும் புதிதில்லை. நட்பும் உறவும் நிறைந்திருக்கும் திருமண மண்டபத்திலேயே இப்படித் திடீரென்று நின்றுபோகிற நிகழ்வுகள் பல. அக்கினி சாட்சியாக நிகழ்ந்தேறிய திருமணங்கள், சட்டத்தின் முன்னிலையில் பிரிந்துபோவதும் இப்போது வெகு இயல்பு. ஒருவகையில் நல்லதுதான். திருமணம் முடிந்து பிரிவதைவிட, இது பரவாயில்லை என்று நினைத்துக்கொள்ளுங்கள்” என்றேன்.

ஆறுதலாகச் சொன்னதைக் கேட்டாலும் இந்த வேதனை அவர்கள் ஆயுட்காலம் வரைக்கும் இருக்கவே செய்யும். அவர்கள் முன்பெல்லாம் சிலராக இருந்தார்கள்; இப்போது பலர்.

அவர், “நிச்சயதார்த்தத்துக்குப் பின்னால, பொண்ணும் மாப்பிள்ளையும் பேசிக்கிட்டாங்க; பார்த்துக்கிட்டாங்க. நல்லாத்தான் இருந்தாங்க. யாரு கண்ணு பட்டிருச்சோ. அவனோட அம்மாவைத்தான் தேற்ற முடியலே. எம் மவனுக்கு என்ன குறைச்சல்னு அழுதுகிட்டே இருக்காங்க” என்றார்.

“மூத்த தலைமுறைக்கு அழவாவது தெரிகிறது. இப்போதைய தலைமுறைக்கு அதுகூடப் பழக்கமில்லை. பின்னாலே அழுவதற்கு முன்னாலே அழுதுவிடுவது நல்லது என்று புரிய வையுங்கள்” என்றேன்.

“என்ன பண்றதுன்னு தெரியல்லே. ஏன் இப்படியெல்லாம் நடக்குது? பிள்ளைங்களை ரொம்பப் படிக்க வச்சது தப்போ?” என வினவினார்.

படிப்புக்கும் அறிவுக்கும் இடைவெளி இருப்பதுபோல், அறிவுக்கும் உணர்ச்சிக்கும் அதிக இடைவெளி வந்திருக்கிறது. மலரினும் மெல்லிய காம உணர்வு நெறி பிறழ்ந்திருக்கிறது. குடும்ப அமைப்பு சுமையென்று இளந்தலைமுறையினர் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

மோகம் முப்பதுநாள். ஆசை அறுபது நாளெல்லாம் அந்தக் காலம். அதெல்லாம் இப்போது மணிக்கணக்கில் என்றாகிவிட்டது. படக்கென்று மனம் மாறிவிடுகிறது. வாழ்க்கை முறை மாறிவிடுகிறது. பழமையில் ஊறிப்போன நமக்குத்தான் இது புதிதாக இருக்கிறது. எதையும் எளிதாகப் பார்க்கவும் விலக்கவும் இவர்கள் பழகிவிட்டார்கள். இப்போக்கு ஆரோக்கியமானது இல்லை என்பதைக்கூட இவர்கள் நினைக்கத் தயாராக இல்லை.

ஆயிரங்காலத்துப் பயிரான திருமணம் இப்போது அடிக்கடி நடைபெறும் மரக்கன்று நடுகிற விழாவாக ஆகிக்கொண்டு வருகிறது. வைக்கிற கணத்தில் அதன்பால் காட்டுகிற அக்கறையையும் ஈடுபாட்டையும் வளர்கிறபோது அதன்மீது செலுத்துவதில்லை. மண்ணில் வேர் இறங்காமல், மரம்போல இட்டுநட்டு வைப்பதில் என்ன பயன் வந்துவிடக்கூடும்?

ஆயினும் நம்பிக்கை தளராமல் இருக்கப் பழக்கமாகிப்போன ஒரு சமாதானத் தொடரை அவர் காதில் போட்டேன்: “காலப்போக்கில் எல்லாமும் சரியாகிவிடும்”. அவர், “காலம் போகுதே சார். காலாகாலத்தில் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டாமா” என்று கேட்டார்.

பெற்றோருக்கு இருக்கிற கடமை மாதிரி, பிள்ளைகளுக்கும் கடமை இருக்கிறது என்பதை எப்படி அவர்களுக்குப் புரியவைப்பது? வாழ்வதற்குப் பொருள் தேடுவதையே இலக்காகக் கொண்டு, வாழ்வின் பொருளை இழக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

“எல்லாம் தலைமுறை இடைவெளி” என்றேன்.

“இனி, எங்கள் தலைமுறை தொடருமா என்பதே சந்தேகமாயிருக்கு” என்றார்.

இந்தச் சோகம் இன்றைக்குப் பல பெரியவர்களைப் பீடித்திருக்கிறது. வாழையடி வாழையென மனிதகுலம் தழைப்பதற்குத் திருமணம்தான் வழி. ஆனால், இன்றைக்குப் பலபேர் திருமணம் எதற்கு என்று கேட்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள். இணை விழைவீச்சு ஒன்று மட்டும்தானா திருமணத்தின் இலக்கு? அதற்கும் அப்பால் உணர்ந்துகொள்ள வேண்டிய பல அற்புதத் துய்ப்புகள் இருக்கின்றன என்பதை எப்படிப் புரியவைப்பது?

விடுதியில் கிடைப்பதும் உணவுதான்; வீட்டில் சமைப்பதும் உணவுதான். முன்னதில் இல்லாத அன்பும் ஆசையும் பின்னதில் இருக்கிறதே. இது உணவு விமடயத்தில் மட்டுமல்ல; உணர்வின் அனைத்துப் பரிமாணங்களிலும் இருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்தத் தவறிவிட்டோம்.

குடும்பம் என்பது சட்டம் போட்டு நடத்துகிற நிர்வாகம் இல்லை; திட்டம் இட்டு நடத்துகிற வணிகமும் இல்லை; கஷ்டமோ, நஷ்டமோ ஆணும் பெண்ணும் இணைந்து இஷ்டப்பட்டு இயங்கவேண்டிய வாழ்வியல் முறை. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, உரிமையும் உணர்ச்சியும் செலுத்தித் துய்க்கவேண்டிய அனுபவம்.

ஆனால், இன்றைய தலைமுறைக்குக் குடும்பம் என்கிற கட்டமைப்பின் பாதுகாப்பை, அதன் அருமையை உணர்ந்துகொள்ள அவகாசம் இல்லை. அன்பின் ருசியை, பிற சாதனங்களின் நுகர்வு சிதைத்து வருகிறது. காதலின் மேன்மையையும் கடமையின் சிறப்பினையும் அனுபவிக்கத் தெரியவில்லை.

இன்பம், துன்பம் இரண்டும் போக, மகிழ்ச்சிக்கும் துயரத்திற்கும் இடைப்பட்டு நிற்குமே, அந்த அன்பின் சுவை அனுபவித்தால்தான் தெரியும். இதனை இலக்கியம் தவிர, வேறு எந்தப் படிப்பால் சொல்லிக்கொடுக்க முடியும்? பாடப்புத்தகம் தாண்டி படிப்பதற்கு நாம் என்ன சொல்லிக்கொடுத்தோம்? வகுப்பறை தாண்டி வாழ்வியல் நிலையில் அவர்கள் கண்ட அனுபவக் காட்சிகள் எவை?

“கஷ்டப்படாம இருக்கணும்கிறதுக்காக, பெத்த பிள்ளையைக் கூடக் கொஞ்சறத்துக்கு நேரம் இல்லாம, வேலை, சம்பாத்தியம்னு நானும் அவளும் ஓடியாடிச் சம்பாதிச்சதெல்லாம் யாருக்காக? எதுக்காக? வயசான காலத்திலே பேரன் பேத்தியோட சந்தோஷமா இருக்கத் தானே? அது தெரியலியே, இந்தப் பிள்ளைகளுக்கு” முதுமையின் அயர்ச்சி எதிரொலித்தது அவர் குரலில்.

இது காலம் கடந்துவரும் ஞானம். வசதிகள் செய்துகொடுத்த அளவிற்கு, நம் பிள்ளைகளுக்கு வாழ்வியல் அனுபவங்களைச் சொல்லிக்கொடுக்கத் தவறிவிட்டோம். குடும்ப உறவுகளுக்கு முன்னோடியாகப் பெற்றோரைக் கருதவேண்டிய பிள்ளைகள் மற்றவர்களைக் கருதிவிட்டார்கள்.

எல்லைமீறி, நம் வாழ்க்கையில் ஊடகச் சித்திரங்கள் பதிவாகிவிட்டன. அவையே உண்மை என்று நம்பத் தொடங்கிய தலைமுறை போய், தாம் நடப்பதை ஊடகங்களில் சித்திரப்படுத்தி உலாவரச் செய்யவேண்டும் என்கிற அளவிற்கு அதன்பால் அபரிமிதமான ஆசை வளர்ந்துவருகிறது.

இப்பொழுதெல்லாம் திருமண நிகழ்வுகள் திரைப்பதிவுக் காட்சிகள்போல் அல்லவா நடைபெறுகின்றன. கணவன் - மனைவியாக வேண்டிய மணமக்கள் காட்சிப்பொருட்களாக ஆகிவிட்டார்கள்.

அந்தக் கல்யாண வீட்டில் அப்படி, இந்தக் கல்யாண வீட்டில் இப்படி என்று அடுத்தவர்களைப் பார்த்துப் பார்த்து செய்து பழகியதன் அபரிமிதப் போக்கு, இப்படியெல்லாம் செய்ய வைக்கிறது.

எல்லாவற்றையும் பிறரைப் பார்த்துச் செய்யப் பழகிய பிறகு, தனக்கென்ற தனித்துவமான சிந்தனையும் தன் குடும்பப் பாரம்பரியப் பெருமையும் இருக்கிறது என்பது எப்படிப் புரிபடும்? புரியவைக்க நாம் என்ன செய்தோம்?

இன்றைய தலைமுறையினர் எதையும் சுலபமாக எடுத்தெறிந்து விடுகிறார்கள்; எறிந்துவிட வேண்டியவற்றைக் கொண்டாடிக் கூத்தடிக்கிறார்கள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. நல்லது, கெட்டது, சரி, தவறு எதுவும் புரியவில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதுகூட இப்போது இல்லை.

இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று இவர்களுக்கே தெரியவில்லை. கருவிகளைக் கையாளத் தெரிந்த அளவிற்கு மெல்லிய உணர்வுகளைக் கூட உணர, வெளிப்படுத்த முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள். கருவிகளுடனேயே காலத்தைப் போக்கிக் கருவிகளாகவே ஆகியும் விட்டார்கள்.

இது இப்போது தனிநபர் பிரச்சினையல்ல; சமூக பிரச்சினை. வரதட்சணைக் கொடுமையைவிட, வளர்ந்துவரும் பிரச்சினை.

நிச்சயித்த திருமணம் இருக்கட்டும். இப்போது தாமே விரும்பிப் பிள்ளைகள் செய்துகொள்கிற திருமணங்களின் முடிவும் இப்படித்தானே ஆகிவருகின்றன. இதற்கெல்லாம் யார் காரணம் என்று தேடுவதைவிடவும் அவரவரும் சுயமாகச் சிந்தித்து நல்லதொரு முடிவு எடுப்பதே நல்லது.

தன் பணியிலோ, தன் பணியைச் செய்யும் கருவியிலோ ஏற்படும் சிக்கல்களை விடுத்துச் சீர்செய்யத் தெரிந்த இந்தத் தலைமுறையினருக்குத் தன் வாழ்வின் சிக்கல்களை அடையாளம் கண்டு அவற்றிலிருந்து காயம் படாமல் விடுவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். உடல்நலக் குறைவுக்காக மருத்துவரை அணுகுவதைப்போல் இதுபோன்ற உளச் சிக்கல்களுக்கும் மருத்துவர்களை அணுகுவது நல்லது.

அதற்கு முன்னர் பெற்றோரிடம் மனம் விட்டுப் பேசுவதும் உரிமைக்கு உற்ற தோழர்களிடம் மனங்கலந்து பேசுவதும்கூட நல்லது. எத்தனையோ பொறுப்புகளை வகித்துத் திறம்படச் செய்துவரும் நமக்கு இதுவும் ஒரு இன்றியமையாத பொறுப்பு என்பது தெரியவேண்டும் அல்லவா?

இது குறித்த அறிவுரையையோ, ஆலோசனையையோ கேட்க இளைய தலைமுறையின் வாழ்க்கை முறையும், இளமைத் துடிப்பும் இடம் கொடுக்காது என்பது தெரியும். ஆனால், இந்த நிலை இப்படியே நீடித்தால் தங்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதை இயற்கை நியதியோடு எண்ணிப் பார்த்து நல்ல முடிவெடுப்பதும் செயற்படுத்துவதும் நல்லது. அதற்காகவாவது அவர்களுக்குள்ளே ஓர் அமைப்பை நிறுவிச் செயற்படுத்துவது காலத்தின் தேவை என்று சொல்லத் தோன்றுகிறது.

**கிருங்கை சேதுபதி**
**நன்றி - தினமணி**

## இன்றைய நாளில்...

**★ 1833 – இலங்கையில் மாவட்ட நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.**

**★ 1863 – நவம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமையை நன்றியறிதல் நாளாக அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அறிவித்தார்.**

**★ 1932 – பிரித்தானியாவிடமிருந்து ஈராக் விடுதலை பெற்றது.**

**★ 1952 – ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.**

**★ 1962 – சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல்லி சீரா ஒன்பது மணிநேரத்தில் ஆறு தடவைகள் பூமியைச் சுற்றினார்.**

**★ 1985 – அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.**

**★ 2007 – மன்னார் மாவட்டம், விளாத்திக்குளம், முள்ளிக்குளம் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட இலங்கை இராணுவத் தாக்குதல் தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.**

## நக்கல் நமசிவாயம்

**கோடி கோடியாய் வச்சிருப்போரை கோடீஸ்வரன் என்று சொல்வதுபோல், பொன்னி அரிசியை தொடர்ந்து விரும்பிச் சாப்பிடும் ஒருத்தனை பொன்னியின் செல்வன் என்று சொல்லலாம் தானே என்னங்கோ..**



# மின்னியல் சந்திப்பு நியமன முறைமை கொன்சியூலர் பிரிவினால் அறிமுகம்



மின்னியல் சந்திப்பு நியமன முறைமையை எஸ்.எல்.டி. மொபிடெலுடன் இணைந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கடந்த 29ஆம் திகதிமுதல் அறிமுகப்படுத்தவுள்ளது. இது கொன்சியூலர் அலுவல்கள் பிரிவின் சரிபார்ப்பு மற்றும் அத்தாட்சிப்படுத்தல் பிரிவில் சிறந்த மற்றும் பயனுள்ள சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்களுக்கு வசதியளிப்பதாக அமையும்.

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையானது, கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறையிலுள்ள அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களில் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான இணையவழி நியமனங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதை எளிதாக்கும்.

மின்னியல் சந்திப்பு நியமன சேவையைப் பெற விரும்புபவர்கள் 225 (கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள்) அல்லது 1225 (நிலையான அழைப்புத் தொலைபேசி பாவனையாளர்கள்) மற்றும் மொபிடெல் மின்னியல் சந்திப்புக்கு (www.echannelling.com) அழைத்து நியமனங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.mfa.gov.lk ) ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும்.



திருகோணமலை சாயி சேவா மத்திய நிலைய வளாகத்தில் சற்குரு சீரடி சாயி பாபாவின் வெண்பளிங்கு திருவுருவச் சிலை பிரதிஷ்டை வைபவத்தின் ஒரு முன்னோடி நிகழ்வாக கொழும்பு புதுச்செட்டித்தெரு சீரடி சாயி மந்திர் அனுசரணையுடன் பூஜையும் பஜனையும் திருமலை சாயீஸ்வரத்தில் இடம்பெற்றன. கொழும்பு சீரடி சாயி மந்திர் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் சீரடி பாபாவுக்கு பட்டு சாத்துவதையும் படத்தில் காணலாம்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெறும் பண மோசடி!

## பொதுமக்களின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்த வேண்டாமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை

எரிபொருள நிரப்பு நிலையங்களில் பொது மக்களின் பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 5 ரூபா வீதம் மோசடி செய்யப்படுவதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

டீசல் மற்றும் பெற்றோலின் தரம் மற்றும் வாகனங்களுக்கு விநியோகிக்கப்படும் அளவு முறையாக தமக்கு கிடைப்பதில்லை என்று கடந்த ஒன்றரை மாத காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த முறைப்பாடுகளுக்கமைய அதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

அதற்கமைய, முதலாவது பரிசோதனை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது. அந்த பரிசோதனைக்கமைய, பெற்றோல் அல்லது டீசலை விநியோகிக்கும்போது அதன் அளவை குறைத்து நுகர்வோருக்கு பெற்றுக்கொடுப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கொழும்பு 07இலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் இரு எரிபொருள் விநியோக பம்பிகளுக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.



அதற்குக் காரணம், நுகர்வோர் வினவும் எரிபொருள் அளவைவிட குறைந்த எரிபொருளை விநியோகித்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. உதாரணமாக ஒரு லீற்றர் எரிபொருள் கோரும்போது 10 மில்லிலீற்றர் எரிபொருளே விநியோகிக்கப்படுகிறது என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். அதனடிப்படையில், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 450 ரூபா எனில் 5 அல்லது 6 ரூபாவுக்கு குறைவான அளவு எரிபொருளே விநியோகிக்கப்படுகின்றது.

விநியோகிப்படும் எரிபொருளுக்கான பணத்தை முறைகேடாக பயன்படுத்துகின்றனர். அதாவது, ஐந்து ரூபாவுக்கும் குறைவான அளவு எரிபொருளே விநியோகிக்கப்படுகின்றது. இந்த எரிபொருள் நிரப்பு நிலையம், இலங்கையிலுள்ள பெரிய எரிபொருள் நிரப்பு நிலையமாகும். இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறதென்றால், 5 ரூபாவின் அடிப்படையில் ஒரு இலட்சம் லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்படுமாக இருந்தால், ஒரு நாளைக்கு 5 இலட்சம் ரூபா இவ்வாறு ஊழல் செய்யப்படுகிறது.

5 இலட்சம் ரூபா அடிப்படையில் ஒரு மாதத்துக்கு 5 மில்லியன் ரூபா வரையிலான பெருமளவு பணம் மோசடி செய்யப்படுகின்றது. இந்தப் பணம் மக்களிடமிருந்து முறையாக கிடைக்கப்பெறுகிறது. இந்தத் தொகையையே ஒரு வருடத்துக்கு பார்த்தால் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் மக்களின் பணத்தில் 175 – 200 மில்லியன் ரூபா சூறையாடப்படுகிறது. இதனூடாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களே இலாபத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இவ்வாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறும் மோசடி நிலைமையை கட்டுப் படுத்தி சரியான அளவில், சரியான தொகைக்குத் தேவையான பெற்றோல் மற்றும் எரிபொருளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அதன்பின்னர் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் பின்னர் கட்டண தொகைக்கும் குறைவாக எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன.

எனவே, மக்களின் பணத்தை முறைகேடாக பயன்படுத்தாமல் அவர்களின் தேவைக்கேற்ற எரிபொருளை விநியோகிக்கவும் மக்களின் பணத்தை மோசடி செய்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம் - என்றார்.

# உணவுப் பாதுகாப்பு - போசாக்கு விடயத்தில் முன்பை விட அதிக கவனம் தேவை

## இராஜாங்க அமைச்சர் ரோஹண வலியுறுத்து



(கண்டி நிருபர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு விடயத்தில் முன்பை விட அதிக கவனம் செலுத்த வேண்டும் - என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவது தொடர்பாக கிராமிய பொருளாதார நிறுவனங்களை வலுவூட்டு வதற்கான கூட்டுப் பொறிமுறை அமைப்பது தொடர்பான கூட்டமொன்று மாத்தளை மாவட்ட, உக்குவெல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (02) நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யக்கூடிய காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த ஊக்குவிக்கவேண்டும். அதற்காக நாம் இயன்ற பங்களிப்பை வழங்கத் தயார்.

பிரதேச மக்கள் அனைவருக்கும் தட்டுப்பாடு இன்றி உணவு வழங்கவேண்டிய தேவையுள்ளது. இதற்கு அனைவரது உதவியும் இந்த வேளையில் தேவைப்படுகிறது.

அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் இதற்காக சிறப்பாக செயற்பட வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்து பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் சகலரும் செயற்படவேண்டும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான பங்களிப்பை வழங்கவேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபை உறுப்பினர்களான சிசிர ஜயம்பதி எட்டிபொல, காமினி குலதுங்க, உக்குவெல சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் டி.டபிள்யூ.விஜேரத்ன உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உடப்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தற்கொலை

(ரஸீன் ரஸ்மின்)

உடப்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியான உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் (01) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய சரத் ஜயந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து தனது கடமையை முடித்துக்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை குறித்த உப பொலிஸ் பரிசோதகர் வீட்டிற்கு சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீட்டில் மனைவியுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே உப பொலிஸ் பரிசோதகர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டாரென மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிந்த நிலையில் கடந்த வருடம் உடப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீர்க்கப்படாமல் இருந்த எல்ப் மேற்பிரிவு தொழிற்சங்கப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு



நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த எல்டப் மேற்பிரிவு தொழிற்சங்கப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு பெறப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் எல்டப் மேற்பிரிவு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற தொழிற்சங்கப் பிரச்சினைகள், தொழில் பிணக்குகளுக்கு தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நேற்று கள விஜயம் ஒன்றை மேற்கொண்டதோடு தோட்ட முகாமையாளர்கள் உத்தியோகத்தர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று தோட்டத் தொழிலாளர்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தோட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியதுடன், பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்து வைப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என தோட்ட அதிகாரி உறுதியளித்தார்.

# யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலைக்கு சீல்!

யாழ்ப்பாணம் பொது நூலக சிற்றுண்டிச்சாலை யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய சீல் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிற்றுண்டிச் சாலை உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச் சாலை சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாக யாழ். மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனடிப்படையில் கடந்த 09ஆம் திகதி சுகாதாரப் பரிசோதகர் சிற்றுண்டிச்சாலைக்கு சென்று சோதனைகளை மேற்கொண்டதுடன், அங்கு காணப்பட்ட சில குறைபாடுகளை உரிமையாளருக்கு சுட்டிக்காட்டி, அதனை நிவர்த்திசெய்வதற்கு கடந்த 28ஆம் திகதி வரையில் காலஅவகாசம் வழங்கப்பட்டது.

கடந்த 28ஆம் திகதி மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது சுகாதாரப் பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமையால், கடந்த வியாழக்கிழமை சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது உரிமையாளர் குற்றத்தினை ஏற்றுக்கொண்டமையால், உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்த நீதவான், சுகாதாரப் பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் சிற்றுண்டிச்சாலைக்கு சீல் வைக்குமாறும் கட்டளையிட்டார்.

அதனையடுத்து சுகாதாரப் பரிசோதகரால் சிற்றுண்டிச்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.





உலக சிறுவர் தினத்தை யொட்டி உடப்பு காளி கோவிலுக்கருகில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றிருந்தன. (படங்கள் - உடப்பு செய்தியாளர்)






# இலங்கை ரீதியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முதலிடம்










(யாழ். நிருபர்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் "வடமாகாணத்திற்கான சமூக பாதுகாப்பு தேசிய விருது வழங்கும் நிகழ்வு" சமூக பாதுகாப்புச் சபையின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் சமன் ஹன்டரகமவும் சிறப்பு விருந்தினர்களாக சமூக பாதுகாப்புச் சபையின் பொது முகாமையாளர் கே.ஏ.எஸ்.பி.களுஆராச்சி மற்றும் பிரதி முகாமையாளர் எஸ்.டபிள்யூ. லக்ஷ்மன் ஆகியோரும் விருந்தினர்களாக மேம்பாட்டு முகாமையாளர் டி.எஸ்.லக்மல், சிரேஷ்ட இணைப்பாளர் ரஞ்சித் தேஸநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்கள், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

சமூக பாதுகாப்புச் சபையின் விருது வழங்கும் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் 2020, 2021ஆம் ஆண்டுகளில் முதலாம் இடத்திற்கான விருதை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பெற்றுக்கொண்டார்.

அத்தோடு, 2019ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்திற்கான விருதை யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பெற்றுக்கொண்டார்.

மேலும், சமூக பாதுகாப்புச் சபையின் விருது வழங்கும் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் 2020ஆம் ஆண்டில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ முதலாம் இடத்தையும், கரவெட்டி பிரதேச செயலாளர் ஈஸ்வரநாதன் தயாபரன் இரண்டாம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. யசோதா உதயகுமார் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் மருதங்கேணி பிரதேச செயலாளர் குமாரசுவாமி பிரபாகரமூர்த்தி இரண்டாம் இடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளைஸ்ரீ மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

2019ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். இது அவர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய காலப்பகுதிக்குரிய விருது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் உடுவில் பிரதேச செயலாளரும் தற்போதைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருமான சிவராஜசிங்கம் ஜெயகாந்தன் 2019, 2020, 2021ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்துக்கான விருதையும், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் 2019, 2020ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமூக பாதுகாப்புச் சபையினால் 2021ஆம் ஆண்டில் தேசிய மட்ட இலக்கை பூர்த்திசெய்தமைக்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இராசதுரை கேசவேலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு, இவ்விருது வழங்கும் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், சமூக பாதுகாப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மணற்காட்டில் சவுக்கு மரங்களை வெட்டி கடத்த முற்பட்ட இரு பெண்கள் உள்ளிட்ட 7 பேர் கைது



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, மணற்காட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உள்ளிட்ட 07 பேர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மணற்காட்டில் சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்கள் வெட்டப்பட்டு சைக்கிளில் கடத்தப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றது.

அதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அப்பகுதியில் சவுக்கு மரங்களை வெட்டி சைக்கிளில் கடத்த முற்பட்ட இரண்டு பெண்கள் உள்ளிட்ட 07 பேரை கைதுசெய்துள்ளதுடன், அவர்களின் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## காந்தி ஜெயந்தியை முன்னிட்டு யாழில் சைக்கிள் பேரணி



(யாழ். நிருபர்)

மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் சைக்கிள் பேரணி கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள காந்தி சிலை முன்றலிலிருந்து, வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி வரை சைக்கிள் பேரணி சென்றது.

யாழ். இந்திய துணைத் தூதுவரின் பங்குபற்றுதலோடும் மும்மதத் தலைவர்களின் ஆசியோடும் இந்தப் பேரணி ஆரம்பமானது.

## யாழில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சத்து 85ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கடந்த 20ஆம், 21ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, 10 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் மீட்கப்பட்டன.

அதேவேளை, நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது வர்த்தக நிலையமொன்றிலிருந்து காலாவதியான பொருட்கள் மீட்கப்பட்டன.

குறித்த இரு பொது சுகாதாரப் பரிசோதகர்களினாலும் தமது பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்களை கடைகளில் வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையின்போது 11 கடை உரிமையாளர்களும் தமது குற்றத்தினை ஏற்றுக்கொண்டதையடுத்து, மன்றினால் உரிமையாளர்களுக்கு மொத்தமாக ஒரு இலட்சத்து 85ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப எங்களின் சம்பளத்தையும் அதிகரிக்குக!

## இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் தலவாக்கலை நகரில் பாரிய போராட்டம்














(பத்தனை - தலவாக்கலை நிருபர்கள்)

70 சதவீத சம்பள உயர்வைக்கோரி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் நேற்றுமுன்தினம் (01) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் கொழும்பு, பதுளை, நுவரெலியா, தலவாக்கலை, ஹட்டன், மஸ்கெலியா, இரத்தினபுரி, மத்துகம மற்றும் நாவலப்பிட்டி உட்பட நாடு தழுவிய ரீதியிலுள்ள இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தலவாக்கலை மல்லியப்பு கோவில் சந்தி பகுதியில் ஆரம்பமான இப்பேரணி, தலவாக்கலை நகரை வந்தடைந்து, அங்கு பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு மற்றும் தொழில்சார் சலுகைகளை வலியுறுத்தும், பதாதைகளை தாங்கியவாறு சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் கடந்த வெள்ளிக்கிழமை (30) காலாவதியானது. இந்நிலையில், தற்போதைய வாழ்க்கைச் சுமைக்கேற்ப 70வீத சம்பள உயர்வு வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வலியுறுத்துகின்றது.

எனினும், 24வீத சம்பள உயர்வை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் முன்வந்துள்ளது. இதனை ஏற்க மறுத்தே, தமது கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் இடம்பெறுகின்றது.

தோட்டக் கம்பனிகளின் இலாபம் மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், இந்த சம்பள உயர்வை வழங்கக்கூடியதாக இருக்கும் என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் பல இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆர்ப்பாட்டத்தினால் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் சுமார் ஒரு மணித்தியாலம் வரை வாகன போக்குவரத்து தடைப்பட்டது. வாகன நெரிசலை சீர் செய்வதற்கு தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## துப்பாக்கியுடன் தப்பியோடிய வீரர் அதிரடிப்படையால் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இராணுவத்துக்கு சொந்தமான கைத்துப்பாக்கியுடன் தப்பியோடிய இராணுவ வீரரொருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

எஹலியகொடை, மின்னான பகுதியில் சந்தேகநபரொருவர் துப்பாக்கியொன்றுடன் உலாவுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து இவர் அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும் அவரை கைதுசெய்ததன் பின்னர் துப்பாக்கியை தம்மிடம் ஒப்படைத்ததாகவும் எஹலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

## குழியொன்றுக்குள் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு

(க.கிஷாந்தன்)

நுவரெலியா, வலப்பனை பகுதியில் குழியொன்றுக்குள் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதையல் தேடல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர் என சந்தேகிக்கப்படும் நிலையில், அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வலப்பனை, குருதுஓய பகுதியிலுள்ள புதையல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறும் பகுதியென கருதப்படும், குழியொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 61 வயதான அபேசிங்க பண்டா மற்றும் 30 வயதான ருவான் குமார ஆகிய இருவரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இருவரும் வெள்ளிக்கிழமை வீடு திரும்பாத நிலையில், அது தொடர்பில் உறவினர்கள் வலப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, இருவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், குழிக்குள் இருந்து தண்ணீர் மோட்டார் இயந்திரமும், குழிக்கு வெளியே இருந்து ஜெனரேட்டர் உள்ளிட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.



# சில பொருட்களுக்கான இறக்குமதி தடை தளர்த்தப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சில பொருட்களின் இறக்குமதித் தடையை அரசாங்கத்தால் தளர்த்தப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த ஓகஸ்ட் 23 அன்று அத்தியாவசியமற்ற பல பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படக்கூடிய உற்பத்திகள் அல்லது அத்தியாவசியமற்றவை என்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

மேலும், நாட்டில் டொலர்கள் பற்றாக்குறையாக காணப்படுவதனால் எரிவாயு, எண்ணெய், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவே இவ் இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானி அறிவித்தலில் ஆயிரத்து 465 பொருட்களை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள், உபகரணங்கள் அன்பளிப்பு!

நாட்டில் தற்போதுள்ள நெருக்கடி நிலைமைக்கமைய, 12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்க அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம், அமெரிக்காவின் பிரபல மனிதாபிமான உதவி அமைப்புகளுடன் இணைந்து, இலங்கைக்கு மருந்துகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. இதுவரை, 3 தடவைகளில் சுகாதார அமைச்சுக்கு மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் இறுதிக் கட்டமாக இன்னுமொரு தொகை மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நேற்று (02) இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தி தான் ட்ரூக் அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

அமைச்சரின் நியமனம் குறித்து தூதுவர் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், அவரது பதவிக்காலத்தில் அவருடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான பலதரப்பட்ட விடயங்கள் குறித்து தூதுவர் கலந்துரையாடினார்.

# ITEC திட்டத்திற்கு இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் மகத்தான ஆர்வம்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு




இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் (ITEC) அடிப்படையில் இந்தியா மற்றும் இலங்கை இடையில் காணப்படும் 58 ஆண்டுகால ஆளுமை விருத்தி பங்குடைமையைக் கொண்டாடும் ITEC தின நிகழ்வுகள் அண்மையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம விருந்தினராகவும், கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்ஹ கௌரவ விருந்தினராகவும் இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்திருந்தனர். ITEC திட்டத்தின்கீழ் இந்தியாவில் பல்வேறு துறைகளிலும் பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்த அதிகாரிகள் மற்றும் இலங்கையிலுள்ள ITEC முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட 100இற்கும் அதிகமானோர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்தியிருந்த உயர்ஸ்தானிகர்,

இந்த ITEC திட்டத்திற்கு இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆண்டாண்டுகாலமாக மகத்தான ஆர்வத்தினை வெளிப்படுத்தி வருகின்றனர். கல்வி மற்றும் திறன் விருத்தி செயற்பாடுகளில் இந்தியா - இலங்கை இடையிலான ஒத்துழைப்புக்கு வானமே எல்லை. ஒவ்வொரு வருடமும் இலங்கைக்காக வழங்கப்படும் 700 புலமைப்பரிசில்கள் மற்றும் ITEC பயிற்சிநெறிகளுக்கான 402 இடங்கள் ஆகியவற்றுக்கு சமாந்தரமாக இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள் இடையிலான கூட்டாண்மை ஊடாக உயர் கல்வி உள்ளிட்ட கல்வித்துறையின் பல்வேறு அம்சங்களிலும் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா மேற்கொண்டிருக்கும் பெருமுயற்சி குறித்தும் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

## கருத்து கந்தசாமி

**பொன்னியின் செல்வன் படம் வந்த நாளன்று கொழும்பு தியேட்டர்களில் அதிகாலை முதலே ஷோ ஓடியது.**

**அதில் இளைஞர் கூட்டம் அதிகம் என்றாலும் அதற்குப் பிறகு படம் பார்க்கச் சென்றவர்கள் நடுத்தர வயது அல்லது முதியவர்கள்தான்.**

**பொன்னியின் செல்வன், கல்கி எழுதிய புகழ்பெற்ற வரலாற்றிலுள்ள பல உண்மை கதாபாத்திரங்களையும் சில கற்பனை கதாபாத்திரங்களையும் வைத்து கற்பனையாக உருவாக்கிய தமிழ் புதினமாகும். 1950 - 1955ஆம் ஆண்டுவரை கல்கி வார இதழில் தொடர்கதையாக வெளியிடப்பட்டது.**

**பலர் கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் நாவல் கதை இந்த திரைப்படத்திற்கு இருக்கிறதா என்று பார்க்கச் சென்றவர்கள். அத்தனை பெரிய கதையை திரைப்படத்திற்கும் அடக்க முடியாதென பலரும் பேசிக்கொண்டதை கேட்கமுடிந்தது.**

**மக்கள் மனதிலுள்ள புதினம் ஒன்றை படமாக எடுத்த ஈழத்தமிழர், வெளிநாட்டு தொழிலதிபர் அல்லிராஜா சுபாஸ்கரன் பலரின் வரவேற்பை, பாராட்டுகளை பெற்றுள்ளார்.**

**படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது இருவர் நகைச்சுவையாக உரையாடிக்கொண்டிருந்தனர். அதில் ஒருவர், என்னதான் வெற்றிப்படமொன்றை எடுத்து தியேட்டர்களில் மக்கள் கூட்டத்தை திரளவிட்டாலும், தயாரிப்பாளரின் பிறப்பிடமான முல்லைத்தீவில் ஒரு தியேட்டர் இல்லையே மச்சான்.. என்றார்.**

**தயாரிப்பாளர் அந்தக் குறையை நிவர்த்தி செய்வார் என்று என் மனதில் எண்ணிக்கொண்டு நடையைக் கட்டினேன்..**










சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இறக்குவானை, ஸ்பிரிங்வூட் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (01) சிறுவர் தின விழா இடம்பெற்றது. அதிபர் அ.குணரத்னம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் சப்ரகமுவ மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி சகுந்தலா மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். இந்த விழாவுக்கு 'ஜூனியர் தமிழன்' பத்திரிகை ஊடக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் (01) மொனராகலையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை மொனராகலை பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எம்பிலிபிட்டிய நகர சபைத் தலைவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



எம்பிலிபிட்டிய நகர சபைத் தலைவர் தினேஷ் மதுசங்க, தாக்குதல் சம்பவமொன்று தொடர்பில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டிய பனாமுர பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதேச அமைப்பாளர் ஒருவரை நகர சபை உத்தியோகபூர்வ வாகனமொன்றில் மேலும் சிலருடன் சென்று தாக்கிய சம்பவம் குறித்து தேடப்பட்டுவந்த நிலையில், அவர் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் தற்போது எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இந்த வாரம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 36ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி எதிர்வரும் 06 தொடக்கம் 08ஆம் திகதிகளில் பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதல் இரண்டு நாட்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் இரண்டு அமர்வுகளுமாக எட்டு அமர்வுகளில் பட்டங்களும், தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. 184 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 40 உள்வாரி மாணவர் களுக்கும், 153 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தர், தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமைதாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங் களையும், தகைமைச் சான்றிதழ் களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப்பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

## இ.போ.ச. பஸ் நடத்துநர் மீது தாக்குதல்!

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இலங்கை போக்குவரத்துச் சபை நடத்துனர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தனியார் பஸ் நடத்துநர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை பின்னவல வீதியில் போக்குவரத்து செய்யும் இந்த இரண்டு பஸ்களில் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்கள நிறுத்தப்பட்டிருந்தபோது அதன் நடத்துநரை தாக்கியதாக பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் பஸ் நடத்துனர் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# வணிக உலகம் Business world

www.thamilan.lk

## WILLIAM ANGLISS நிறுவனத்துக்கு மேம்படுத்தப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம்



SLIITபல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டுள்ள William Angliss Institute கட்டடத்துக்கு புதிதாக இணைக்கப்பட்ட பகுதி அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள், வில்லியம் அங்லீஸ் இலங்கை நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுடன் சிறப்பு விருந்தினர்கள் பலரும் மேற்படி வைபவத்தில் கலந்துகொண்டனர். அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை செயலாளர் திருமதி ஜூடித் ஸ்லெசின் அம்மையார் நாடாவை வெட்டி திறப்பு விழாவை தொடங்கி வைத்தார். சம்பிரதாயபூர்வமாக பால் பொங்கி, மங்கள விளக்கேற்றுவதற்காக சகல விருந்தினர்களும் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள சமையலறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நிக்கலஸ் ஹன்ட் மற்றும் இலங்கை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுக் வீரசிங்க ஆகியோர் உரையாற்றும்போது, கட்டடத்தை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக உழைத்த ஒப்பந்தக்காரர்களுக்கும், வழங்குநர்களுக்கும், வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைவர் ஏரல் வீரசிங்க உள்ளிட்ட நிர்வாகத்தினருக்கும் பணியாட்டொகுதியினருக்கும் நன்றி தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து இலங்கை பாணியில் தயாரிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரம் மற்றும் பகல் போசன உபசரிப்பு நிகழ்வு இடம்பெற்றது. புதிய கட்டட வளாகம் இரண்டு சமையலறைகளைக் கொண்டுள்ளது.

## SLT-MOBITEL மற்றும் IOCPL இணைந்து நிறுவியுள்ள தெற்காசியாவின் முதலாவது கடலடி கேபிள் நிலையத்தைப் பார்வையிட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் விஜயம்



இலங்கையை உலகுடன் இணைக்கும் பணிகளில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL ஆற்றும் முக்கிய பங்களிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், காலியில் நிறுவியுள்ள தெற்காசியாவின் முதலாவது கடல் கீழ் கேபிள் நிலையத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்வையிடும் வசதியை ஏற்படுத்தியிருந்தது.


சிங்கப்பூர் ரெலிகொம் மற்றும் பிரான்ஸ் ஒரேன்ஜ் மரின் ஆகியவற்றின் இணை நிறுவனமான இந்தியன் ஓஷியன் கேபிள் சிப் பிரிஈ லிமிடெட் உடன் இணைந்து கோல் சப்மரின் கேபிள் டிபோ பிரைவேட் லிமிடெட்டை SLT நிறுவியிருந்தது. 2018ஆம் ஆண்டில் இந்த நிலையம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன், தெற்காசியப் பிராந்தியத்தில் காணப்படும் இந்த வகையைச் சேர்ந்த ஒரே நிலையமாகவும் அமைந்துள்ளது.

இந்த நிலையத்தின் அங்கமாக, கேபிள் பழுதுபார்ப்பு நிலையமான ஏசியன் ரிஸ்டோரர் காலியில் அமைந்துள்ளது. இந்த டிப்போவின் அமைவிடத்தினூடாக காலியை அண்மித்ததாக ஐரோப்பா முதல் ஆசியா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கான கடலடி கேபிள்கள் நிறுவப்பட்டுள்ளதால், துரிதமாக கடலடி கேபிள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை முன்னெடுக்க உதவியாக அமைந்துள்ளது. கடலடி கேபிள் பழுதுபார்ப்புகளை முன்னெடுப்பதற்கு அவசியமான மேலதிக கேபிள்களையும், அவசியமான சாதனங்களையும், பரிசோதனைக் கருவிகளையும் இந்த நிலையம் கொண்டுள்ளது.

தூதுவர் சங் மற்றும் பொருளாதாரப் பிரிவின் தலைமை அதிகாரி பிலிப் லூஸ்லி ஆகியோர் விஜயத்தை முன்னெடுப்பதில், SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, SLT குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் இன் SLT Mobitel சிரேஷ்ட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

## "செலவைக் குறைப்போம் – வருமானத்தை அதிகரிப்போம்" என்ற தேசிய வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் சனச தலைமையில் வெற்றிகரமாக நிறைவுற்றது

சனச குழுமத்தின் நிறுவுனர் கலாநிதி பி.ஏ. கிரிவந்தெனியாவின் கருத்தின்படி, "செலவைக் குறைப்போம் – வருமானத்தை அதிகரிப்போம்" எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் சனச குழுமத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு செப்டெம்பர் 19ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் இடம்பெற்றது. நாட்டில் 5,000 கிராமங்களை அபிவிருத்தி செய்வதே இதன் இலக்கு. இந்நிகழ்வில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக்க முத்துகல, சனச இயக்கத்தின் ஸ்தாபகரான கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய, சனச ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் கலாநிதி ஜயந்த விக்கிரமரத்ன மற்றும் சனச குழுமத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



## சிறந்த வணிக இணையத்தளத்துக்கான தங்கப் பதக்க விருதை வென்ற Cosmetics.lk



ஒரு தசாப்தத்துக்கு மேலாக அழகுக் கலை சாதனங்கள் மற்றும் மூலிகை உற்பத்திகள் மூலம் இலங்கை பூராவும் தமது வர்த்தக நாமத்தை நிறுவியுள்ள Cosmetics.lk தனியார் நிறுவனம், இலங்கையின் முதன்மையான டிஜிட்டல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவாக கருதப்படுகின்ற BestWeb.lk விருது விழாவில் சிறந்த இணைய தொழில்முயற்சி (வர்த்தக) இணையத்தளத்துக்கான தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. ஆக்கத்திறன், இலகுவான பாவனை மற்றும் நம்பகரமான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள www.cosmetics.lk இணையத்தளமானது, வாடிக்கையாளர்களின் தொடர் கவனத்துக்கும் பயன்பாட்டுக்கும் உள்ளாகியுள்ளமை மேற்படி விருதை வெல்வதற்குப் பிரதான காரணமாகும்.

அமெரிக்காவின் முன்னணி அழகுக்கலை சாதன உற்பத்தி நிறுவனமான ET Browne Drug நிறுவனத்தின் Palmer's வர்த்தக நாமத்தின் இலங்கைக்கான ஏக முகவராக LMJ International நிறுவனம் செயற்படுகின்றது. இந்நிறுவனத்தின் அழகுசாதன உற்பத்திகளை cosmetics.lk இணையத்தளம் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

LMJ International நிறுவனத்தின் டிஜிட்டல் தொழில்நுட்பக் குழு cosmeticslk இணையத் தளத்தை வழிநடத்தி தமது வாடிக்கையாளர்களுக்கு அழகு சாதன உற்பத்திகளை இலகுவாக கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பேற்படுத்தி கொடுத்து மேம்பட்ட சேவையினை வழங்குகிறது.

## சிறந்த தொழில்முயற்சி இணையத்தளத்துக்கான தங்கப் பதக்க விருதை வென்ற La Vivente



நவீன ரக தைத்த ஆடைகள் உற்பத்தித்துறையில் வளர்ந்து வரும் வர்த்தக நாமமான La Viventeஇற்கு இலங்கையின் முன்னணி டிஜிட்டல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவான BestWeb.lk விருது வழங்கும் விழாவில் விருது வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ளது.

அந்த வகையில் Dilchand தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான ஜனரஞ்சக வர்த்தக நாமமான La Vivente வர்த்தக நாமத்துக்குரிய www.lavivente.lk இணையத்தளம் சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் சிறந்த இணையவழி தொழில்முயற்சி இணையத்தளத்துக்கான தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. மேற்படி விருது விழா கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

ஆக்கத்திறன், இலகுவான பாவனை மற்றும் நம்பகரமான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக் கப்பட்டுள்ள www.lavivente.lk இணையத்தளமானது, புத்தாக்க சிந்தனை யுடன் வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான பாவனையையும் கவனத்தையும் பெற்றதன் அடிப்படையில் மேற்படி விருதை வென்றுள்ளது.

கடந்த ஆண்டில் SLIM வர்த்தக நாம விருது விழாவில் சிறிய மற்றும் நடுத்தரப் பிரிவின் சிறந்த உள்நாட்டு நிறுவனத்துக்குரிய தங்கப் பதக்க விருதையும் சிறந்த புதிய நிறுவனத்துக்கான வெங்கலப் பதக்க விருதையும் Dilchand நிறுவனம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## INSEE CEMENT சவாலான காலங்களில் சமூக மேம்பாட்டிற்கு தொடர்ந்து ஆதரவளிக்கிறது



இலங்கையின் மிகப்பெரிய மற்றும் முன்னணி சீமெந்து உற்பத்தியாளரான INSEE Cement, 5,00,000இற்கும் மேற்பட்ட பயனாளர்களுக்கு நல்விளைவை ஏற்படுத்திய பல சமூக அபிவிருத்தித் திட்டங்களில் தொடர்ந்து முதலீடு செய்வதன் மூலம் முன்னெப்போதுமில்லாத வகையிலான வருடத்தின் முதல் பாதியை நிறைவுசெய்துள்ளது. Puttalam Cement Works (PCW) மற்றும் Ruhunu Cement Works (RCW) ஆகியவற்றை அண்டியதாக இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

INSEE Cement தான் இயங்கும் சமூகங்களில் வலுவான ஒருங்கிணைப்பை ஊட்டுவதன் மூலம் வேலைவாய்ப்பு, வலுவூட்டுவதல், சமூக மேம்பாடு மற்றும் பல்வேறு சமூகத் திட்டங்கள் மூலம் நிறுவனத்துடன் இணைந்து சமூகங்களும் முன்னேற்றம் காண்பதை உறுதிசெய்துள்ளது.

## சர்வதேச ARC விருதுகள் 2022 இல் மக்கள் வங்கியின் 2021 ஆண்டறிக்கை இரட்டை தங்க விருதுகளை வென்றது



இலங்கையில் முதன்மையான அனுமதிபெற்ற வணிக வங்கியாகத் திகழும் மக்கள் வங்கி மீண்டும் 2022 சர்வதேச ARC விருதுகள் வழங்கும் விழாவில் (International ARC Awards 2022) இரண்டு தங்க விருதுகளை வென்றது. அமெரிக்காவில் நியூயோர்க நகரில் இடம்பெற்ற இவ்விழாவில் மக்கள் வங்கி தமது 2021ஆம் ஆண்டுக்கான "Multifaceted Brilliance" என பெயரிடப்பட்ட ஆண்டறிக்கைக்கே இவ்விருதுகளை வென்றது. ஆண்டறிக்கைக்காக ஒரு அகடமி விருதாக சர்வதேச நிதிச் சமூகத்தினால் இந்த ARC விருதுகள் கருதப்படுகின்றன. குறிப்பாக, இம்முறை நிகழ்வின் போது இலங்கையில் ஒரே அனுமதிபெற்ற வணிக வங்கியாக மக்கள் வங்கி கலந்துகொண்டு இரண்டு தங்க விருதுகளை வென்றது.

இந்நிகழ்வின்போது வங்கியானது மொத்தமாக நான்கு விருதுகளை வென்றது.

- ★ எழுதப்பட்ட உரைக்கான தங்க விருது வங்கி தேசிய
- ★ நிதித்த தரவுகளுக்கான தங்க விருது வங்கி தேசிய
- ★ அட்டைப்படம்/வடிவமைப்புக்கான வெண்கல விருது வங்கி தேசிய

கௌரவம் - சிறப்புத்தேர்ச்சி பெற்ற ஆண்டறிக்கை: ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை மற்றும் சமூகப் பொறுப்பு பாரம்பரியமற்ற வடிவம்

இந்த வெற்றி தொடர்பாக தமது கருத்துகளை பகிர்ந்துகொண்ட மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ,

"இந்த வெற்றி தொடர்பில் நாம் உண்மையில் பெருமையடைகின்றோம். மேலும் அதை பெற்றுக்கொண்ட தளத்தையும் கருத்திற்கொண்டு பெருமையடைகின்றோம். ARC விருதுகள், 30இற்கும் அதிகமான நாடுகளிலிருந்து 1600இற்கும் அதிகமானோர் கலந்துகொள்ளும் உலகின் மிகப்பெரிய சர்வதேச ஆண்டறிக்கை போட்டியாக விளங்குகிறது. மேலும் இத்துறையில் சிறந்தவர்களுக்கு உலகெங்கிலுமுள்ள புகழ்பெற்ற 100இற்கும் அதிகமான இத்துறை சார்ந்த நிபுணர்களால் பல அடுக்கு மதிப்பீட்டு செயன்முறைகளுக்கு அமையவே இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மக்கள் வங்கியானது தமது 61ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

விலைமதிப்பற்ற வைரத்தினைப் போல வங்கியானது தமது ஆறு தசாப்த கால செயற்பாடுகளில் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் மக்கள் பரவல் கொண்ட நாட்டின் அனைத்துப் பிரிவினருக்கும் சேவை செய்யும் பன்முகத்தன்மை கொண்ட நிதி நிறுவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

## எதிர்கால சுகாதார உலகில் தனது 37ஆவது காலடியை நவலோக்க மருத்துவமனைக் குழுமம் எடுத்துவைத்துள்ளது



இலங்கையின் தனியார் மருத்துவமனை சேவையின் முன்னோடியான நவலோக்க மருத்துவமனை குழுமம், எதிர்கால உலகின் மருத்துவமனை சேவைக்கு இலங்கையை இட்டுச்சென்று, அதன் 37ஆவது ஆண்டு சிறப்பை செப்டெம்பர் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் மிகவும் பெருமையுடன் கொண்டாடியது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நவலோக்க குழும மருத்துவமனை, அதிநவீன மருத்துவ சாதனங்கள் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவ சிகிச்சைகளை அணுகுவதற்கு முன்னோடியாக உள்ளது. நவலோக்க குழும மருத்துவமனைகள் நாட்டிலுள்ள அதிநவீன சிகிச்சைகள் மற்றும் சிறந்த மருத்துவ மற்றும் தாதியர் தொழில்முறை ஊழியர்களையும் கொண்டுள்ளது.

நோயாளிகளின் ஆரோக்கிய நலனை உறுதிசெய்வதற்காக நவலோக்க குழும மருத்துவமனைகள் அதன் ஆண்டு நிறைவை அதன் மேம்பட்ட மற்றும் அதிநவீன முதன்மை பராமரிப்பு பிரிவு, Serene Center மற்றும் அதே கட்டடத்தில் ஒரு புதிய கதிரியக்கப் பிரிவு திறப்பு விழாவுடன் ஆரம்பித்தது. இதன்மூலம் பல்வேறு நோயாளிகளின் தேவைகளை ஒரே கூரையின் கீழ் பூர்த்திசெய்ய முடிகிறது. இந்நிகழ்வில் நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச,உப தலைவர் அனிஷா தர்மதாச மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அதன்பின், மருத்துவமனை தாதியர் பயிற்சி பாடசாலையில் பயின்ற 38இற்கும் மேற்பட்ட தாதியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களின் பெற்றோர்களும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர். நவலோக்க குழும மருத்துவமனைகள் அதன் ஊழியர்கள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய இரண்டின் மூலமாகவும் நோயாளிகளுக்கு சிறந்த சுகாதார வசதிகள் மற்றும் கவனிப்பை வழங்க முயற்சிக்கிறது. வருடாந்தர திறன் மதிப்பீட்டு விருது என்பது சுகாதார நிபுணர்களின் தரத்தை மேம்படுத்தும் முயற்சியாகும். 25 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவமனையில் சேவையாற்றிய 15இற்கும் மேற்பட்ட மருத்துவமனை ஊழியர்களுக்கு விருதுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

## நெஸ்லே லங்கா சவால்மிக்க இக்காலகட்டத்தில் தனது கூட்டாளர்களுக்கு ஆதரவளித்து வருகிறது



115 ஆண்டுகளுக்கும் மேலாக இன்பத்திலும், துன்பத்திலும் தனது கூட்டாளர்களுக்கு உறுதுணையாகத் திகழ்ந்துவந்துள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், நெஸ்லே லங்கா தனது மதிப்பு சங்கிலி கூட்டாளர்களுக்கு உணவு மற்றும் பான வகை தயாரிப்புகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தது. தற்போதைய பொருளாதார தளம்பல் நிலைமையில் அதனைச் சமாளிப்பதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நற்காரியம், ஊழியர்களின் தன்னார்வத் தொண்டுப்பணி மூலம் இலங்கைக்கு பிரதியுபகாரம் ஆற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான பயணத்தின் அங்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டமானது, கொழும்பில் உள்ள நிறுவனத்தின் தலைமை அலுவலகம், குருநாகலிலுள்ள தொழிற்சாலை மற்றும் விநியோக மையம் ஆகியவற்றின் ஆதரவுச் சேவை ஊழியர்கள் மற்றும் அதன் கள விற்பனை அணியினர் மத்தியில் நிறுவனத்தின் மதிப்பு சங்கிலிக் கூட்டாளர்களின் 3,500இற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு 'நெஸ்லே அக்கறை அன்பளிப்புப் பொதிகள்' வடிவில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குப் பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டது. ஓகஸ்ட் மாதத்தில் அதன் முயற்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், நிறுவனம் இதன் இரண்டாம் கட்டமாக பாலை மூலமாகக்கொண்ட மதிப்புச் சங்கிலியிலுள்ள அதன் 240இற்கும் மேற்பட்ட கூட்டாளர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட 'நெஸ்லே அக்கறை அன்பளிப்புப் பொதிகள்', நாட்டில் தலைதூக்கும் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு காண உதவும் வகையில், இரும்புச்சத்து, விற்றமின் டி செழுமை நிரம்பிய நெஸ்லே நெஸ்டமோல்ற் மற்றும் இரும்புச் சத்தின் செழுமை நிரம்பிய நெஸ்லே மெகி ரசமுசு போன்ற இலங்கையில் உணவில் குறைபாடாகவுள்ள நுண்ணூட்டச்சத்துகளின் செழுமையுடன், நெஸ்லேயின் மிகவும் அபிமானம் பெற்ற தயாரிப்புகள் அடங்கலாக மிகவும் சிந்தித்து தயாரிக்கப்பட்டுள்ளன.

"இது சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், இலங்கையில் நம் அனைவருக்கும் மிகவும் சவாலானதொரு காலகட்டமாகும். முன்னெப்போதையும் விட இப்போது நாம் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதும் ஒருவருக்கொருவர் உதவுவதும் மிக முக்கியமானது. எங்கள் மதிப்புச் சங்கிலி கூட்டாளர்களின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் நாங்கள் மிகுந்த கவனம் செலுத்துகிறோம். எனவே, இந்த நேரத்தில் அவர்களுக்கு மிகவும் தேவையான ஆதரவை வழங்க நாங்கள் தொடர் செயல்திட்டங்களை ஆரம்பித்தோம். எங்களின் வணிகச் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு அவர்களின் மீள்எழுச்சி மற்றும் விலைமதிப்பற்ற பங்களிப்பிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்'' என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா கருத்து தெரிவித்தார்.

## இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் 23ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தியுள்ளது



இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் தனது 23ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தை 2022 செப்டெம்பர் 9ஆம் திகதியன்று, கொழும்பு சினமன் கிராண்டில் நடத்தியது. தொற்றுநோய்க்குப் பிறகு முதன்முறையாக நேரடியாக இடம்பெறும் இந்த ஆண்டு நிகழ்வின் கருப்பொருளாக, "மாற்றத்தின் சவால்" (The Challenge of Change) என்பது அமையப்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரான கலாநிதி ரமேஷ் பத்திரன கௌரவ அதிதியாக இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் சபைத் தலைவர் நிராஜ் டி மெல்லும் கலந்து சிறப்பித்தனர். "தேயிலைக்கான மாற்றத்தின் சவால்" (The Challenge of Change for Tea) என்ற தலைப்பிலான பிரதான உரையை இலங்கையின் பொருளாதார நிபுணரும், சமூக விஞ்ஞானியும் மற்றும் Erasmus University - Rotterdam, International Institute of Social Studies – The Hague ஆகியவற்றின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் ஹோவர்ட் நிக்கொலஸ் ஆற்றினார்.

ஈஸ்வரன் பிரதர்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் கணேஷ் தெய்வநாயகம் 2022/2023 காலகட்டத்திற்கான சங்கத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2019-2022 வரை மூன்று வருடங்கள் சங்கத்தை வழிநடத்திய சஞ்சய ஹேரத்துக்குப் பின் அவர் இப்பதவியை ஏற்றுள்ளார்.

## DFCC வங்கியும் AIA Insurance உம் தம்முடைய நீண்ட கால கூட்டாண்மை மற்றும் Bancassuranceஇல் உச்ச சாதனையாளர்களைக் கொண்டாடியுள்ளன




AIA/DFCC Bancassurance விருதுகள் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் உள்ள ஓக் நிகழ்வு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வானது AIA/DFCC Bancassurance மற்றும் DFCC வங்கியின் Bancassurance வணிகத்தில் உச்ச சாதனையாளர்களை அங்கீகரித்துள்ள, அதே நேரத்தில் வங்கி மற்றும் காப்புறுதித் துறையில் இந்த இரண்டு பெரு நிறுவனங்களுக்கும் இடையிலான வலுவான,நீண்டகால கூட்டாண்மையைக் கொண்டாடியுள்ளது. 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் AIA Bancassurance மற்றும் DFCC வங்கியின் வணிக மார்க்கங்களில் சிறந்து விளங்கி,Bancassurance வணிகத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சிக்கு உந்துசக்தியளித்தவர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

DFCC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திமால் பெரேரா மற்றும் AIA Insurance இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான சத்துரி முனவீர ஆகியோர் இந்த நிகழ்வில் முக்கிய விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். அத்துடன், இரு நிறுவனங்களின் ஏனைய அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணியினரும் கலந்து சிறப்பித்துள்ளனர். 2016 நவம்பர் முதல் வங்கியின் நாடளாவிய கிளை வலையமைப்பின் ஊடாக வழங்கப்படும் ஆயுள் காப்புறுதி தொடர்பான தயாரிப்புகளுக்கான DFCC வங்கியின் பிரத்தியேக கூட்டாளராக AIA Insurance திகழ்ந்து வருவதுடன், இந்த நோக்கத்திற்காக இரு தரப்பினரும் ஒரு நீட்டிக்கப்பட்ட உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

## எயார்டெல் லங்கா தமது பிற்கொடுப்பனவு கட்டணத்தை 50%ஆல் குறைத்து புதிய புரட்சியை ஏற்படுத்த தயாராகிறது

நாடு முழுவதிலுமுள்ள 24 மாவட்டங்களுக்கும் தமது தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதற்காக அதன் நாடு தழுவிய 4G ஐ அறிமுகப்படுத்தியதன் பின்னர், மற்றுமொரு துறையில், எயார்டெல் லங்கா தனது அனைத்து பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து வலையமைப்புகளுக்கும் வரையறையற்ற அழைப்புகளை அறிமுகப்படுத்திய முதல் தொலைத்தொடர்பு நிறுவனமாகும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், முற்கொடுப்பனவு பாவனையாளர்களுக்கு Freedom Unlimited Packகள் மூலம் எந்தவொரு வலையமைப்பிற்கும் வரையறையற்ற அழைப்புகளை அறிமுகப்படுத்தியது எயார்டெல் ஆகும்.

வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்குவதன் மூலம் இலங்கை தொலைத்தொடர்பு துறையில் புரட்சியை ஏற்படுத்தும் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பணியின் ஒரு பகுதியாக, Airtelஇன் Unlimited Freedom பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களின் சமீபத்தில் அறிமுப்படுத்தப்பட்டது Unlimited 1098 பெக்கேஜ் ஆகும். 1,098 ரூபா பெறுமதியில், புதிதாக வடிவமைக்கப்பட்ட இந்த Unlimited பெக்கேஜ் மூலம்இ பிற்கொடுப்பனவு பாவனையாளர்கள் எந்த வலைப்பின்னலுக்கும் வரையறையற்ற அழைப்புகளை அனுபவிக்க முடியும். மேலும் 40GB 4G டேட்டாவுடன் முழு HD தரமான வீடியோ மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் SMS வசதிகளுடன் எந்த வலைப்பின்னலுக்கும் மாதத்திற்கு போதுமானதாக இருக்கும்.

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, ரஜ எல பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின்பேரில் மூன்று பேரை கைதுசெய்துள்ளதாக கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய், ரஜ எல பகுதியில் வெல்ஹேன்கொட சுசந்த சில்வா என்பவருடைய வீட்டு வளாகத்தில் புதையல் தோண்டுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூன்று சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (01) மாலை கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த 45, 51 மற்றும் 53 எனவும் பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே குறித்த இடத்தில் கல் ஒன்று இருந்ததாகவும் அந்த இடத்தில் புதையல் இருப்பதாக தெரியவந்ததை அடுத்து குறித்த இடத்தை தோண்டியதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட குறித்த மூன்று சந்தேக நபர்களையும் கந்தளாய் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோராமல் இழுத்தடிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்களைக் கோருமாறு அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு அனுமதி வழங்கி ஒரு வருடமாகியும் கல்வி அமைச்சு இன்னும் விண்ணப்பம் கோராமல் காலங்கடத்தி வருவதாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்து, தமது சங்கம் கடிதங்களை அனுப்பிவைத்திருப்பதாக அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒரு பதவிக்கான வெற்றிடம் ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அப்பதவி தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுவது அரச சேவை ஆணைக்குழுவின் நிர்வாக நடவடிக்கை விதிமுறையாகும். ஆனால், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம் ஏற்பட்டு சுமார் ஒன்றரை வருட காலம் கடந்துள்ளபோதிலும் அப்பதவியை முறைப்படி நிரப்புவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் கல்வியமைச்சு எடுக்கவில்லை.

தற்போதைய கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வியமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட கடமை நிறைவேற்றல் கடிதத்தின் (Cover-up duties) அடிப்படையில் சுமார் 15 மாதங்களாகக் கடமை புரிந்து வருகிறார். இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் அவர் ஓய்வுபெறவுள்ள நிலையில், அப்பதவியை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்வியமைச்சு இதுவரை கோராதுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாண குறிப்பின் அடிப்படையில் மாகாண கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும். மாகாண கல்விச் செயலாளருக்கோ மாகாண ஆளுநருக்கோ இது தொடர்பாக எவ்வித அதிகாரமும் இல்லை. எனினும், இதனை மீறிய வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. அவசரத் தேவையின் நிமித்தம் ஒரு சிரேஷ்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி நியமனம் செய்யப்பட்டார் என்றவகையில் இதனை ஏற்றுக்கொண்டாலும் இது ஒரு பிழையான முன்மாதிரியாகும்.

தகவலறியும் சட்டத்திற்கமைய மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் கல்வி அமைச்சிடம் சுமார் 10 மாதங்களுக்கு முன்னர் தகவல் கோரியபோது, விரைவில் விண்ணப்பம் கோரப்படும் எனவும் இதற்குரிய அனுமதியை அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு வழங்கியுள்ளதாகவும் எமது சங்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. ஆனால், இன்னும் விண்ணப்பம் கோரப்படவில்லை.

மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி என்பது அகில இலங்கை மட்டத்திலான பதவியாகும். கிழக்கு மாகாண அதிகாரிகளைக்கொண்டே நிரப்ப வேண்டும் என்ற எவ்வித தேவையும் இல்லை. எனவே, தகுதியான அதிகாரிகள் திறந்த விண்ணப்பம் கோரப்படுவது மூலம் நிரப்பப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் மற்றும் செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிந்தவூரில் போதைப்பொருள் பாவனை 50 வீதத்தால் வீழ்ச்சி

## சுகாதார வைத்திய அதிகாரி றயீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேசத்தில் போதைப்பொருள் மற்றும் புகையிலை பாவனையில் 50 வீதம் வரை தற்போதைக்கு குறைவடைந்துள்ளதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.றயீஸ் தெரிவித்தார். நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் நிதியிலிருந்து நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு எரிபொருள் செலவீனங்களுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் புகையிலை பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் புகையிலை பாவனை தடைசெய்யும் அதிகாரம் சரியாக பயன்படுத்தப்பட்டதால் நிந்தவூர் பிரதேசத்தில் இருந்து புகையிலை பாவனைக்காக செலவிடும் பல கோடி ரூபா பணத்தை மீதப்படுத்த முடிந்தது. எமது சமூகத்தை போதையில் வைத்திருக்க வேண்டிய தேவை சிலருக்கு இருக்கலாம். ஆனால், அதனை அனுமதிக்க முடியாது. எமது பிரதேசத்தில் பயன்படுத்தப்படாதுள்ள குழாய்க்கிணறுகள் டெங்கு பெருக்கத்திற்கு காரணமாக அமைகின்றன. கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தில் நிந்தவூர் 7ஆவது இடத்தில் உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்க முறைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து இதுவரை நிந்தவூர் பிரதேசத்தில் சுமார் ஆயிரம் நபர்களுக்கு விழிப்புணர்வு



செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த காலகட்டத்தில் முன்பள்ளிப் பருவ மாணவர்களின் போசாக்கு விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் - என்றார்.

நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் உப தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.நியாஸ் (தப்லிகி) தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் செயலாளர் எம்.எஸ்.எம்.நிப்றாஸ், பொருளாளர் ஆதம்பாவா, நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் உறுப்பினர்களான நிந்தவூர் ஜம்மியத்துல் உலமாவின் செயலாளர் மௌலவி ஏ எம் ஆஷிக் அலி, நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பொருளாளர் ஏ.எல்.அன்வர்டீன், உப தலைவர் ஏ.அஸ்வத்கான், நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர் ஏ.அஸ்பர், கதீப் முஅத்தீன் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.ஏ.சி.எம்.அப்துல் ரகுமான் உட்பட பலரும் கலந்துகொண்டனர். இதன்போது நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எரிபொருள் தேவைக்கான நிதி உதவி அனர்த்த முகாமைத்துவ அணியின் உப தலைவரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று பதூர் நகரில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பதூர் நகரில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர் நபரொருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 60 மில்லிகிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (01) ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# களுதாவளையில் முகமூடி அணிந்து ஆயுதமுனையில் துணிகரக் கொள்ளை

## 57 பவுண் தங்க நகைகள் - 10 இலட்சம் ரூபா பணம் அபேஸ்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, களுதாவளையில் கடை முதலாளி ஒருவரின் வீட்டில் நள்ளிரவில் உள்நுழைந்த மூகமூடி அணிந்த கொள்ளையர்கள் துப்பாக்கி மற்றும் கத்திமுனையில் 57 பவுண்தங்க நகைகள், 10 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்து சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளை பிரதான வீதியிலுள்ள குறித்த கடை முதலாளி, அவரது தாய், சகோதரிகள் உட்பட நான்கு பேர் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், சம்பவ தினமான கடந்த புதன்கிழமை வழமைபோல் இரவு கடையை பூட்டிவிட்டு வீட்டிற்குச் சென்று தூங்கிக்கொண்டிருந்தனர்.

இதன்போது நள்ளிரவு வீட்டின் யன்னல் கதவை உடைத்து வீட்டிற்குள் உள்நுழைந்த முகமூடி அணிந்த 4 பேர், வீட்டின் அறையில் நித்திரையில் இருந்தவர்களின் கழுத்தில் கத்தி மற்றும் துப்பாக்கிகளை வைத்து அவர்களை வீட்டின் மண்டபத்துக்கு அழைத்துவந்து சத்தம் போட்டால் கொல்லப்படுவீர்களென அச்சுறுத்தி அங்கிருந்த 57 பவுன் தங்க நகைகள் 10 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையடுத்து பொலிஸார் தடவியல் மற்றும் மோப்பநாய்கள் வரவழைத்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதியோர் தினத்தை முன்னிட்டு 97 வயது மூதாட்டி கௌரவிப்பு





(எம்.என்.எம்.அப்ராஸ்)

உலக சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு கல்முனை சமுர்த்தி பிரதேச அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வுகள் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நேற்று முன்தினம் (01) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி முன்னிலையில் நற்பிட்டிமுனைச் சேர்ந்த கலந்தர் உம்மா (97 வயது) உட்பட மேலும் இதன்போது கல்முனையைச் சேர்ந்த நெய்னா முகம்மது (86 வயது), மருதமுனையைச் சேர்ந்த பி.எம்.ஹிசாம் மதார் (73 வயது) ஆகிய முதியோர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் மிகவும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப் பட்டமளிப்பு

## 2506 பேருக்கு வழங்கிவைப்பு









(செங்கலடி நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தின் நல்லையா மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழா ஆரம்ப நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் வாக்லே கலந்துகொண்டதுடன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ந. பஞ்சநாதமும் பங்கேற்றார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் 42ஆவது ஆண்டைப் பூர்த்திசெய்யும் வேளையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறுகின்றமை



குறிப்பிடத்தக்கது. இம்முறை வெளிவாரி மற்றும் உள்வாரியாக கல்விநெறிகளைப் பூர்த்திசெய்துள்ள 2506 பேர் பட்டம் பெறுகின்றனர்.

கலாநிதி, முதுதத்துவமாணி, விவசாய, விஞ்ஞான முதுமாணி, முதுகலைமாணி, முதுகல்விமாணி, வணிக நிர்வாகத்தில் முதுமாணி, அபிவிருத்திப் பொருளியல் முதுமாணி, முகாமைத்துவ பட்டப்படிப்பின் டிப்ளோமா மற்றும் இளமாணி உட்பட 1247 பேருக்கு முதல் நாள் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் விழாவின்போது 1259 பேர் பட்டம் பெற்றனர். கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல்தடவையாக தொழில்நுட்பப்பீட மாணவர்களுக்கான விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப இளமாணி பட்டம் வழங்கப்பட்டது.







**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தனின் அழைப்பின்பேரில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த இந்தியத் தூதுவர், திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு சென்று பூஜை வழிபாடுகளில் பங்குகொண்டதுடன், தொடர்ந்து திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு, திருகோணமலை மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற 200 குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினார்.**

# போடியார் புலம்பல்!



***எங்கட ஆட்சியிலதான் தமிழ் மக்களுக்கு தீர்வு எண்டு ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. சொல்லியிருக்காரு எலுவா..?***

***ஜே.வி.பி. கட்சி ஆட்சியமைக்கிறதும் கிழவி புள்ள பெறுகிறதும் ஒண்டுதான். அநுரகுமார திசாநாயக்க தமிழ் மக்களுக்கு சீவியத்தில ஒரு தீர்வும் கிடையாது எண்டத இப்படி சுற்றி வளைத்து சொல்லாம சொல்லி இருக்கிறாரு. என்ன நான் சொன்னது சரி எலுவா?***

# அக்கரைப்பற்று பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா



(ஆலையடிவேம்பு நிருபர்)

பன்னெடுங்கால வரலாற்றைக் கொண்டதும் அற்புதங்கள் நிறைந்ததுமான அக்கரைப்பற்று பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் தேரோட்டம் நேற்று முன்தினம் (01) பெருந்திரளான பக்தர்களின் வேண்டுதலோடு நடைபெற்றது.

கடந்த இரு வருடகாலமாக கொரோனா மற்றும் பல்வேறு காரணங்களால் பக்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், இடம்பெற்ற அலங்காரத் திருச்சடங்கு இவ்வருடம் பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்புடன் ஆரம்பமானது.

இதற்கமைவாக அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமான தேரோட்டம் அக்கரைப்பற்றிலுள்ள பிரதான வீதிகிளினூடாக சென்று அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. தோரோட்டம் நடைபெற்ற வீதிகள் யாவும் துப்புரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், அம்மனை வரவேற்று வழிபாடுகளில் ஈடுபட அதிகளவான பக்தர்கள் தமது வீடுகளின் முன்னால் ஒன்றுகூடி காத்திருந்து கும்பங்கள் வைத்து அம்மனை தரிசித்ததை காணமுடிந்தது.

நாளை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நோர்ப்பு நெல் எடுத்துவரலும், சக்தி மகா யாகம் நோர்ப்பு நெல் நேர்தல் கடற்குளிப்பு ஆகிய கிரியைகளுடனும் 05ஆம் திகதி காலை இடம்பெறும் பக்தி ததும்பும் தீ மிதிப்பு 12ஆம் திகதி இடம்பெறும் எட்டாம் சடங்குடனும் நிறைவுறும்.

ஆலயத் தலைவர் தலைமையில் இடம்பெறும் வருடாந்த அலங்காரத் திருச்சடங்கும் ஆலய வழிபாட்டு பிரதான கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு விஸ்வ பிரம்மஸ்ரீ தா.காளிதாசன் ஆச்சாரியின் வழிகாட்டலில், விஸ்வ பிரம்மஸ்ரீ த.தினேஸ்காந் ஆச்சாரி உள்ளிட்ட உதவி பூசகர்களாலும் நடத்திவைக்கப்படவுள்ளன.

# உலக செய்திகள்

## இந்தோனேஷியாவில் பெரும் பதற்றம்

# கலவரபூமியானது கால்பந்து மைதானம்




### தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாது ஆடுகளத்தை துவம்சம் செய்த ரசிகர்கள்

- 174 பேர் உயிரிழப்பு; 180 பேர் படுகாயம்
- ஒருவார காலம் போட்டிகள் நடத்தத் தடை
- வன்முறை குறித்து உடனடி விசாரணை நடத்த ஜனாதிபதி ஜோகோ உத்தரவு





இந்தோனேஷியாவில் கால்பந்தாட்ட மைதானத்தில் ஏற்பட்ட வன்முறையில் 174இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், 180இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகின்றது.

வன்முறையைத் தொடர்ந்து இந்தோனேஷியாவில் ஒருவாரத்துக்கு கால்பந்து போட்டிகள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், வன்முறை குறித்து உடனடி விசாரணை நடத்த அந்நாட்டு ஜனாதிபதி ஜோகோ (Joko Widodo) உத்தரவிட்டுள்ளார்.

38,000 பேர் அமரும் மைதானத்தில் 42,000 ரிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளதாக கிழக்கு ஜாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாவில் மலாங் மாகாணத்திலுள்ள கஞ்சுருஹான் மைதானத்தில் நேற்று கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் உள்ளூர் அணிகளான அரேமா (Arema) மற்றும் பெர்செபயா சுரபயா (Persebaya Surabaya) ஆகிய அணிகள் மோதின. இப்போட்டியில் அரேமா அணி 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் சொந்த மண்ணில் தங்களுடைய அணி தோல்வியடைந்ததை தாங்கிக்கொள்ள முடியாத அரேமா அணியின் ரசிகர்கள், கடும் கோபமடைந்த நிலையில் ஆடுகளத்திற்கு நுழைந்தனர். அப்போது களத்திலிருந்த பல அரேமா வீரர்கள் தாக்கப்பட்டனர். இதனால் கலவரம் வெடித்தது.

கலவரத்தைக் கட்டுப்படுத்த கூட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதையடுத்து அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

கலவரம், கூட்ட நெரிசலில் சிக்கி 178இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 180இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோனோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈரானில் ஹிஜாப் அணியாமல் சாப்பிட்ட இரு பெண்கள் கைது



ஈரான் தலைநகர் தெஹ்ரான் உணவகத்தில், ஹிஜாப் அணியாமல் சாப்பிட்ட இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

டோனியா ரெட் மற்றும் மற்றொரு பெண் தலையில் ஹிஜாப் இல்லாமல் சாப்பிடும் புகைப்படம் வலைத்தளங்களில் பரவியதால் கைதுசெய்யப்பட்டனர்.

சமீபத்தில் எழுத்தாளரும் கவிஞருமான மோனா பர்சாய், கால்பந்து வீரர் உசேன் மகினி, முன்னாள் ஜனாதிபதி அக்பர் ஹசாமி ரஃப்சாஜானியின் மகள், ஃபெயிசா ரஃப்சாஜானி போன்ற செல்வாக்குமிக்கவர்களையும் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். தற்போது போராட்டங்கள் நடந்துவரும் சூழலில், இந்த கைது நடவடிக்கை மக்களை மேலும் கொதிப்படையச் செய்துள்ளது.

**பலத்த காயங்களுடன் பெண்ணின் உடல் மீட்பு**

ஈரானில் மூக்கை உடைத்து, தலையில் பலமாக தாக்கி சந்தேகத்திற்கிடமான காயங்களுடன் 17 வயதுப் பெண்ணின் உடல் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு காணாமல்போன, 17 வயதுச் சிறுமி நிகா ஷகராமியின் உடலை பாதுகாப்புப் படையினர் குடும்பத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சரியாக ஹிஜாப் அணியாததால் 22 வயதுப் பெண் மஹ்சா அமினி பொலிஸ் காவலில் உயிரிழந்தார். அவரது மரணத்திற்கு எதிராக போராட்டங்கள் நடந்துவரும் நிலையில், இந்தக் கொடூரக் கொலை மக்களை மேலும் கொதிப்படையச் செய்துள்ளது.

அடக்குமுறையில் இதுவரை 83 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஈரான் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## குஷ்புவுக்கு கோல்டன் விசா



சினிமா உட்பட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஐக்கிய அரபு அமீரக அரசு சார்பில் கோல்டன் விசா வழங்கப்பட்டு வருகிறது. இதன் காலாவதி 10 வருடங்களாகும். கமல்ஹாசன், விஜய் சேதுபதி, பார்த்திபன், திரிஷா உட்பட பலருக்கு இந்த விசா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரபல நடிகை குஷ்புவுக்கு கோல்டன் விசா வழங்கப்பட்டுள்ளது. டுபாயில் நடந்த நிகழ்ச்சியில் அமீரக அரசு சேவை நிறுவனமான இசிஎச் டிஜிட்டல் தலைமை நிர்வாகி இக்பால் மார்க்கோனி கோல்டன் விசாவை குஷ்புவுக்கு வழங்கினார்.

# இந்தியாவிடம் மீண்டும் மண்கவ்விய இலங்கை

### இரண்டாவது தடவையாக சம்பியனான இந்திய லெஜெண்ட்ஸ்



வீதி பாதுகாப்பை மையப்படுத்தி இந்தியாவில் நடைபெற்ற ஓய்வுபெற்ற கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் ரோட் சேஃப்டி வேல்ட் சீரீஸ் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜெண்ட்ஸ் அணியை வீழ்த்தி சச்சின் தலைமையிலான இந்திய லெஜெண்ட்ஸ் அணி இரண்டாவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தை வென்றது.

கடந்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமான குறித்த தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ராய்பூரில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய லெஜெண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு ஆடிய இலங்கை லெஜெண்ட்ஸ் அணி 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக சதம் விளாசிய இந்திய லெஜெண்ட்ஸ் அணி வீரர் நமன் ஓஜா தெரிவாக, தொடர் ஆட்டநாயகனாக இலங்கை லெஜெண்ட்ஸ் அணியின் தலைவர் திலகரத்ன டில்ஷான் தெரிவானார். கடந்த வருடம் நடைபெற்ற முதல் தொடரின் இறுதிப்போட்டியிலும் இந்திய லெஜெண்ட்ஸ் அணியிடம் இலங்கை லெஜெண்ட்ஸ் அணி தோல்வியைத் தழுவி சம்பியன் பட்டத்தை இழந்தமை குறிப்பிடத்தக்கது.







அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இலங்கை கிரிக்கெட் அணி நேற்று அதிகாலை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திலிருந்து ஆஸி. நோக்கி புறப்பட்டது.

# கூடைப்பந்தாட்ட சம்பியனான அமெரிக்கா




(ரமணி)

பெண்கள் கூடைப்பந்து உலகக் கிண்ணத்தை தொடர்ச்சியாக 4ஆவது முறையாக அமெரிக்கா வென்றது. அமெரிக்கா 83-61 என்ற கணக்கில் சீனாவை வீழ்த்தி தொடர்ந்து நான்காவது தங்கப் பதக்கத்தை வென்றது. தற்போது 11 தங்கப் பதக்கங்களை வென்றுள்ள அமெரிக்கா உலகக் கிண்ண வரலாற்றில் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் அணிகளில் ஒன்றாகும்.

ஏறக்குறைய 16,000 ரசிகர்கள் இறுதிப்போட்டியைக் கண்டு ரசித்தனர். 1953இல் சிலியில் நடந்த தொடக்கப் போட்டிக்குப் பிறகு பெண்கள் உலகக் கிண்ண விளையாட்டில் கலந்துகொண்ட மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இதுவாகும்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## தேசிய மட்டத்துக்குத் தெரிவான மகிழூர்முனை சக்தி வித்தியாலய மாணவி





பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட மட்/பட்/மகிழூர்முனை சக்தி வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சுஜிதா, இந்தாண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட பரா விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

இதன்மூலம் குறித்த மாணவி தான் கல்விகற்கும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ள நிலையில் அவரை பாராட்டுவதுடன், அம்மாணவிக்கு விசேட தேவை அலகில் கற்பித்துவரும் ஆசிரியர்களான த. சஞ்ஜீவன், செல்வி கு. தவப்பிரியா ஆகியோரையும் மாணவிக்கு சிறந்த வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிவருவதோடு, விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விக்கு ஊக்குவிப்பினை வழங்கிவரும் பாடசாலையின் அதிபர் வ.பேரின்பநாயகத்தையும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரும் இணைந்து பாராட்டி வருகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7